பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்


டொலர் கோர்ப்பரேஷன்
1ம் குறுக்குத் தெரு? ... வீதி கொழும்பு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (5-6-66) இதழ் 118

பராபவ வைகாசி 23 ஸபர் 15 ஞாயிற்றுக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
10 சதம்
கட்டியை வாங்கி
அதிக லாபமடையுங்கள்.

# யாழ். நகர விருத்திக்கு திடீர் திட்டங்கள்

## பொறுப்பேற்ற மூவர் கமிஷன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்பட்டபின் அதன் நிர்வாகத்தை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ மூவர் கமிஷன் நேற்று மாநகர நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. டபிள்யு. எஸ். பெர்னாண்டோ; வடபகுதி உள்ளூராட்சி உதவிக் கமிஷனர் திரு. எஸ் ஸி. மாணிக்கவாசகர், யாழ்ப்பாணம் மாவட்ட மராமத்து என்ஜினியர் திரு. என். நடேசன் ஆகிய மூவரும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் மாநகரசபையின் பல்வேறு இலாகாக்களின் தலைவர்களையும் கொண்ட மகாநாடொன்றைக்கூட்டி புதிய சூழ்நிலை பற்றியும் வேலைத்திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூறினர்.

### நகர முன்னேற்றம் மக்கள் வசதி

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. பெர்னாண்டோ நேற்றுக் காலையில் வந்து சேர்ந்து பிற்பகலில் கொழும்பு திரும்பினார்.

நகரத்தின் முன்னேற்றமும் நகர மக்களின் வசதியுமே முக்கியமென்றும் இதற்காகவே தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை ஊழியர்களும் இதையே கருத்தில் கொண்டு கடமையாற்ற வேண்டுமென்றும் கமிஷனர்கள் திரு. நடேசனும், திரு. மாணிக்கவாசகரும் கூறினர். (5-ம் பக்கம் பாக்க)

## தென் வியட்னுமில் 8 வது தற்கொலை

சைகோன், ஜூன் 4

இருபௌத்த பிக்குணிகள் இன்று தென்வியட்னுமில் தீ வைத்துக்கொண்டு இறந்தார்கள். கடந்த எட்டு நாட்களில் பிரதமர் கீயின் அரசாங்கத்தையும். அவருக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதையும் எதிர்த்து தற்கொலை செய்துகொண்டவர்கள் இதுவரை 8 பேர்.

பிரெஞ்சு அதிபர் டிகால் தமது விசேஷ பிரதிநிதி ஒருவரை பீகிங்குக்கும், ஹானோய்க்கும் நடுநிலையை அறிந்துவரும் முகமாக அனுப்ப இருக்கிறாரென அறிவிக்கப்பட்டது.

டிகாலின் பிரதிநிதி இந்தியா, கம்போடியா, லாவோஸ், தாய்லந்து ஆகிய நாடுகளுக்கும் வருவார் என அறிவிக்கப்பட்டது.

## எடுத்தல் கடத்தல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரிலுள்ள ஜவுளிக்கடைகள் பல நேற்றும் ஒற்றைப்பலகை திறந்த நிலையில் காட்சியளித்துக் கொண்டிருந்தன. குறிப்பாக ஒருசில கடைகளில் மட்டுமே வியாபாரம் நடைபெற்றது. குறைந்த விலைக்கு ஜவுளி வாங்கலாம் என்ற எண்ணத்துடன் வந்த பெண்கள் பலர் கடைகளின் வாசலில் தொங்கவிடப்பட்டிருக்கும் ''இருப்பு எடுத்தல்'' ''விலை குறைத்தல்'' போன்ற வார்த்தைகளைக் கொண்ட அட்டைகளைக் கண்டு ஏமாந்து சென்றனர்.

அனுராதபுரத்திலுள்ள பல ஜவுளிக்கடைகளும் ஒற்றைக்கதவு திறந்த நிலையில் மூடப்பட்டிருந்தன. ஆனால் ஒரு விசேஷம் கடைமுன்பாக, பலகையில் மாட்டப்பட்டிருந்த அட்டையில் இருப்புஎடுத்தல் என்பதற்குப் பதிலாக சில அட்டைகளில் இருப்பு கடத்தல் என்றுஎழுதப்பட்டிருந்தன.

கொழும்பிலும் இன்றுஜவுளிக்கடைகள் பூட்டப்பட்டிருந்தன. ——

## 2 லட்சம்பேர் வேலைநிறுத்துவர்!

கொழும்பு, வெள்ளி

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த 2 லட்சம் தோட்டத்தொழிலாளர் ரூபா 17-50 விசேஷ பஞ்சப்படி கோரி, வருகிற 13-ந் திகதி வேலைநிறுத்தம் மேற்கொள்வார்களென அறிவிக்கப்பட்டது.

## 1000க்கு அதிக படங்கள் வந்தன!

கேப்கென்னடி, ஜூன் 4

அமெரிக்க சந்திரக் கலம் 'ஜெமினி 9' 1000க்கு அதிகமான புகைப்படங்களை இதுவரை பூமிக்கு அனுப்பியிருக்கிறது.

## நீங்கள் அதிர்ஷ்டசாலிகளா?

கொழும்பு, சனி

92-வது தேசிய சுவீப் முடிவுகள்:

முதலாவது பரிசு
15 G 0057 ரூ. 43,340

இரண்டாவது பரிசு
10 D 0740 ரூ. 17,336

(5-ம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணி நிறுவினர்

### மாவட்டசபை அமைப்பு பற்றி மந்திரிக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறுபான்மைத் தமிழர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்றபெயரில் கூட்டுச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பண்டிதர் வ. கதிரவேல் தலைமையில் நடைபெற்ற ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் இச்சபை நிறுவப்பட்டதுடன் பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.


''மாவட்டசபைகள் அமைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாலும் உத்தேச மாவட்டசபையில் சிறுபான்மைத்தமிழர்களின் நல உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும்விதத்தில் விசேஷ ஷரத்துக்கள் அமையவேண்டுமெனக் கருதப்படுவதாலும் மாவட்டசபைகள் மசோதா பாரிலிமெண்டில் சமர்ப்பிக்கப்படுவதற்குமுன் சிறுபான்மைத் தமிழரின் கூட்டுச்சபையைக் கலந்தாலோசிக்கவும், இச்சபையின் பிரதிநிதிகளை மாவட்டசபை அமைப்பு, ஆலோசனைக் குழுவில் இடம்பெறச் செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு ஸ்தலஸ்தாபன மந்திரியைக் கேட்டுக் கொள்கிறோம்.''

இந்த முன்னணியின் நிர்வாகிகள் வருமாறு: இணைக் காரியதரிசிகள்- திரு. ஜி. நல்லையா, திரு. எம். ஸி. சுப்பிரமணியம். தலைவர்- பண்டிதர் வ. கதிரவேலு. தனாதிகாரி- திரு. நா. த. செல்லத்துரை, பொதுநிர்வாகசபை, விஷயாலோசனைச்சபை ஆகியனவும் தெரிவுசெய்யப்பட்டன.

## பொலிஸில் ஜவுளிக்கட்டுகள்

கொழும்பு, சனி

புறக்கோட்டையிலுள்ள ஒரு ஜவுளிக்கடையிலிருந்து ஐந்துபேல் ஜவுளிக் கட்டுகளை வெளியேற்ற முயற்சி செய்ததாக சந்தேகத்தின் மீது நேற்றிரவு நால்வர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர், பின்னர் இவர்கள் பிணையில் விடப்பட்டனர். ஆனல் கைப்பற்றப்பட்ட ஜவுளிக் கட்டுகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன


தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

# நாளை கடைசி

## கடைதிறக்காவிடில் ஜவுளிகள் பறிமுதல்!

கொழும்பு, சனி

திங்கட்கிழமையும் தங்கள் கடைகளைத் திறக்க மறுக்கும் ஜவுளிவர்த்தகர்களிடமிருந்து ஜவுளிகளை எடுத்துக்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு [illegible] மொத்த விற்பனவு ஸ்தாபனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

''இருப்பு எடுத்தல், விலை நிர்ணயித்தல்'' என்று காரணம் கூறி காலவரையறையின்றி சில வர்த்தகர்கள் தங்கள் கடைகளைப் பூட்டி வைத்திருக்கக்கூடுமெனக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே வர்த்தக அமைச்சர் இந்த முடிவைச் செய்திருக்கிறார்.

திங்கட்கிழமைவரை வர்த்தகர்களுக்கு கால எல்லை கொடுக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமையும் கடைதிறக்கத் தவறினல் ஜவுளிகள் கைப்பற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ஆள்தேவை

மிளகாய்த்தூள் நன்றாக அரைக்கத்தெரிந்த ஆள் தேவை விபரங்களுக்கு கே. ஆர். லிங்கம் மில்ஸ், நீராவியடி, யாழ்ப்பாணம். 526

### கல்வி

வகுப்புகள்

கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. (சாதாரணம்/உயர்தரம்) G. A. Q., தையல், சிங்களம், ஆங்கிலம், தாதிமார் பரீட்சை, ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சை, காலை, மாலை வகுப்புகளும் பாடசாலை செல்லும் 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை/வதிரி, கரவெட்டி. (524)

பாடங்கள்

சிங்களம் தமிழ் விளக்கங்களுடன் வீடுகளில் சென்று கற்றுக்கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்: ஆசிரியர் M. பாலசிங்கம், சந்திரா கபே, இருபாலைச்சந்தி, கோப்பாய். 527

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையில் 14 கமானியார் வளவில் நான்கு (4) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 503

### வாடகைக்கு

வீடு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அரை மைல் தூரத்தில் சண்டிருப்பாய் பிரதான வீதியில், சீரணிச் சந்தியில் நவீன சுகாதார முறைப்படி கட்டப்பட்ட கக்கூசு, குளியறையோடு, ரெல்லிபோன் மின்சார வசதியுள்ள வீடு வாடகைக்குண்டு. Dr. W. சிவகுருநாதன், கட்டுடை மானிப்பாய். நேரில் சந்திக்கவும். 523

### வைத்தியம்

தொய்வு, கசம் நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய வுபரங்கள் அடங்கிய கற்றலோச் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கேவூலடி, யாழ்ப்பாணம்.


வேலணை, சனி

இந்து சன்மார்க்க சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவுவிழா யாழ்ப்பாணத்திலுள்ள திரு. கே. இ. கதிர்காமலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. பஜனையும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - சந்திரகாந்தா
நடித்த
**தெய்வத்திருமகள்**

**ராஜா!**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ராங்கராவ் பானுமதி
நடித்த
**அன்னை**

REGAL—JAFFNA
NOW SHOWING!
VINCENT PRICE
in
**THE PIT AND THE PENDULUM**
(Cinemascope - color)
(ADULTS ONLY)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
**தெய்வத்தாய்**


# உருத்திரபுரத்தில் விவசாயிகள் தொழிற்சங்கம்

கிளிநொச்சி, சனி

'தொழிலாளர்கள் தமக்கென சங்கங்கள் அமைத்து போராடியதன் மூலம்தான் சம்பள உயர்வு, லீவுவசதி, நஷ்டஈடு போன்ற பல வசதிகளைப் பெற்ருர்கள் அதேபோல ஏழை விவசாயிகளும் தமக்கென சங்கமமைத்து ஒன்றுபடுவதன் மூலமே அவர்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு கஷ்டங்களையும் கடக்க வழிகாண முடியும்'

சென்ற ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் விவசாயிகள் சங்கத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் வடபிரதேச கமிட்டியின் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி தெரிவித்தார்.

திரு. ஆ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு கந்தசாமி மேலும் குறியதாவது:

'பல்வேறு அதிகாரிகளாலும், விலைபொருட் சங்கங்களினுலும் வியாபாரிகளினுலும் சூறையாடப்படும் ஏழை விவசாயிகள், நல்ல ஆஸ்பத்திரி வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ அற்ற நிலையில் பெரும் கஷ்டத்திற்காளாகிருர்கள்.

கடந்த மூன்று போகங்களாகவரட்சியாலும் வெள்ள அழிவாலும் விளைச்சல்பாதிக்கப்பட்ட உருத்திரபுரம் விவசாயிகள் இம்முறை விளைந்த நெல்லை சங்கத்திற்குக் கொடுத்து மூன்று மாதத்திற்கு மேலாகியும் பணம் பெறமுடியாது பெரும் கஷ்டப்படுகிருர்கள். இதைத் தீர்க்க உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிக்கவேண்டும்''

''தொழிலுக்கொரு சங்கமிருப்பதுபோல விவசாயிகளும் தமக்கென சங்கம் அமைத்தால்தான் அவர்கள் முன்னேறமுடியு உருத்திரபுரம் விவசாயிகள் இப்படியான ஒரு சங்கத்தை அமைப்பதன் மூலம் கரைச்சிப்பகுதியிலிருக்கும் ஏனைய விவசாயிகளுக்கு வழிகாட்டியாக இருக்கிருர்கள்'' என திரு. வி. தியாகராசா பேசும்போது தெரிவித்தார். திருவாளர்கள்: தி. துரைராசா, சு. சண்முகநாதன் ஆகியோரும் பேசினுர்கள்.

உருத்திரபுரம்விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகளாக கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் இ. ஐயாத்துரை, உப தலைவர் ஆ. கந்தையா, காரியதரிசி வி தியாகராசா உப காரியதரிசி சி. சுவாம்பிள்ளை, தனுதிகாரி வே. சுப்பிரமணியம். சி. துரைராசா, சு. சிவானந்தன், வ. தம்பையா, கா. அப்புத்துரை ஆகியோர் கமிட்டி அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தப் போகத்தில் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட நெல்லுக்கு உடனடியாகப் பணம் கொடுக்கப்படவேண்டும். இது தவறின் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## 'ஆசிரியர்களுக்கும் ஒழுக்கம் தேவை'

### வருடாந்தக்கூட்டத்தில் அதிபர் பேச்சு

நீர்வேலி. சனி

வலிகாமம் கிழக்கு ஆசிரிய சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. க. இராசரத்தினம் தலைமையில் ஆரம்பமாயது.

கொழும்புத்துறைஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு சி, விசுவலிங்கம் ''ஒழுங்கு'' என்னும் தலைப்பில் பேசும்பொழுது ஒழுங்கு மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்கும் மிக அவசியமாகும், சமூகத்திலே ஒரு ஆசிரியன் ஒரு வைத்தியனுக்குச் சமனை இடத்தைப் பெறுகிருன். குழந்தைகளின் உடல் உளத் தேவைகளை ஆசிரியர் அறியவேண்டும் மாணவனைப்பற்றியும் மாணவனின் வீட்டுச் சூழ்நிலை பற்றியும் ஆசிரியர் அறிந்திருத்தல்வேண்டும் என்ருர்,

புதிய ஆண்டுக்குரிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ச. குமாரசாமி; உபதலைவர்கள்; திரு. த. வை. தனேஸ்வரன், திரு எஸ். மகிழ்ரசா; செயலாளர் திரு. சு சண்முகரத்தின சர்மா; உதவிச்செயலாளர்: திரு. மு. இராசா; பொருளாளர்: திரு. இ. யோகேஸ்வரன்; கணக்குப் பரிசோதகர்: திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை,

## சந்தேகநபர் கைது

சுழிபுரம் சனி

தொல்புரத்திலுள்ள ஒரு வீட்டில் ரூபா 1200 உட்படச் சில விலையுயர்ந்த பொருள்கள் திருடப்பட்டது சம்பந்தமாக சங்கானை பொலிசாரினுல் தேடப்பட்டுவந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இம்முயற்சியில் தொல்புரம் கிராம சேவையாளர் திரு. மு. [illegible]

## மகாராணியை மறித்தார்!

இயோவில், (இங்கிலாந்து) ஜூன் 4

வியட்னும் யுத்தத்தை ஆட்சேபித்து. கொடியொன்றை ஆட்டியபடியேமகாராணி எலிஸபெத்தின் காரை மறித்தார் ஒருவர்.

மகாராணியின் ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு முன் வீதியில் அவர் அமரவே. கார் நிறுத்தப்பட்டது. பொலிசார் அவரை வீதியின் ஓரமாக இழுத்து விட்டனர்.

இந்தமனிதருக்கு காரினுல் மோதல் எதுவும் ஏற்படவில்லையென உறுதியளிக்கப்பட்ட பின் ராணியின் மோட்டார் தொடர்ந்து சென்றது, பிடிஸி


## விளம்பரம்

### புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

காரைநகர் கருங்காலி போசிட்டி முருக மூர்த்தி கோவிலில் வியாழக் கிழமை (2-6-66) தொடக்கம் 7 நாட்களுக்குப் புனராவர்த்தனப் பிரதிஷ்டையும், புதன்கிழமை(8-6-66) காலை 10 மணிமுதல் 12 மணிவரை மகாகும்பாபிஷேகமும்நடைபெறும். (465)


## 'அறவழியைக் காட்டியவர் வள்ளுவர்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வையத்துள் வாழ்வாங்கு வாழப்பிறந்த நாம், வாழும் வகைதெரியாது அல்லற்பட்டு, ஆற்ருது அழுகிருேம். அறத்தை - அறநூல்களை - அடிக்கடி நினைவிலிருத்தினுல், தீமைகள் புரியும் உள்ளம் நன்மையை நாடும். சிறுவயதிலேயே நீதி வாக்கியங்களை மனப்பாடம் செய்யும் வழக்கம் மறைந்துவருவது கவலைக்குரியதாகும். பள்ளிக்கூடங்களிலே திருக்குறட்பாக்களை, மனப்பாடமாகச் செய்யவேண்டியது மிக மிக அவசியமாகும்'' என திரு. மு. சிவானந்தம் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற வள்ளுவர்விழாவிலே சிறப்புரை ஆற்றுகையிற் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து பேசுகையிற் குறிப்பிட்டதாவது; ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப் பாரதியார் கூறியது வெறும் புகழ்ச்சியல்ல. குறளின் பெருமையை உணர்ந்து பல நாட்டவர்களும் தத்தமது மொழிகளிற் பெயர்த்தெழுதியுள்ளார்கள். உலகின் பல பிரிவினர்க்கும் - சாதி, சமய, இன வேறுபாடில்லாமல் - பொதுவானஅறத்தை. எக்காலத்திற்கும் பொருத்தமான அறவழியைக் காட்டியவர் வள்ளுவர். எனவேதான் உலகத்திற்கே உரியவராகிருர்.

இடித்துரைக்கவேண்டிய இடங்களில் இடித்துரைத்தும், நயமாகப் பேசவேண்டிய இடங்களில் நாசூக்காகவும் பேசியுள்ளார். இரண்டடிக் குறள் என்ருலும் அவற்றிலே காணும் ஆழமும், உவமைநயமும் உள்ளுந்தோறும் உணருந்தோறும் உவகை பயப்பன.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

"லேடன்" **LEYDEN**
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் ட
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெமி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● கால்மேஸ் (Nylon & Cotton)
**லேடன் காமென்ஸ்**
32A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் இரு பேரங்கள்

# அணுகுண்டை முதலில் உபயோகிக்கவில்லை; அப்படியானல் சோதனையை நிறுத்துவீர்களா?

## விளக்கம் தருமாறு சீனவுக்கு அமெரிக்கா கோரிக்கை

### குண்டு வீச்சை நிறுத்தினல் என்ன செய்வீர்கள்? வட வியட்னமுடனும் அமெரிக்கா பேரம்

வாஷிங்டன், ஜூன் 4

அணுகுண்டை முதலில் உபயோகிப்பதில்லை என அமெரிக்கா முடிவுசெய்தால், சீன மேற்கொண்டு அணு சோதனைகளை நிறுத்துமா? 100 நாடுகளுக்கு மேல் கையொப்பமிட்டிருக்கும் அணு சோதனைத்தடை ஒப்பந்தத்தில் சீன கையெழுத்திடுமா? இது பற்றி விளக்கம் தெரிவிக்குமாறு அமெரிக்கா சீனவைக் கேட்டிருக்கிறது.

முதலில் அணுகுண்டை உபயோகிப்பதில்லை என்ற நிபந்தனையை இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா நிராகரித்துவிட்டதாயும், சமீபத்தில் அமெரிக்கா இதற்கு உத்தரவாதமளித்தால் சீன அணு சோதனையை நிறுத்துவதற்கு விரும்புமென பிரதமர் சூ-என்-லாய் தெரிவித்த கோரிக்கையை அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ரஸ்க் நிராகரித்துவிட்டதாயும் கூறப்பட்டது. வெறும் பிரகடனம் மட்டும் போதுமான உத்தரவாதம் என்ற காரணத்திஞல் திரு. ரஸ்க் இதை நிராகரித்தார் எனக் கூறப்பட்டது.

ஆனல் இப்போது இந்த நிபந்தனை பற்றி விளக்கம் தருமாறு அமெரிக்கா கேட்டிருக்கிறது.

வடவியட்னமுக்கும் பேரம் ஒன்றை அமெரிக்கா விடுத்திருக்கிறது.

வடவியட்னம் மீதான அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தப்பட்டால், தென்வியட்னமுக்குள் படைகளை ஊடுருவல் செய்யாமல் இருக்க சம்மதிப்பீர்களா? குண்டு வீச்சை நிறுத்திஞல், பதிலுக்கு என்ன செய்வீர்கள்? என ஹானேயிடம் அது விளக்கம் கோரியுள்ளது. இந்தக் கோரிக்கைக்கு சீனவிடமிருந்தோ, வடவியட்னமிடமிருந்தோ இன்னும் பதில் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

ஆயுதப்பரிகரணத்தில் சீனவுக்கு உண்மையான சிரத்தை கிடையாது என அமெரிக்க வட்டாரங்கள் கூறுகின்றன.

## "அமெரிக்காவுடன் சண்டையிட ஆயத்தமாய் இருங்கள்"

### சீனக் கோரிக்கைக்கு ஜப்பானிய கம்யூனிஸ்டுகள் ஆப்பு

டோக்கியோ, ஜூன் 4

அமெரிக்காவுடன் தவிர்க்க முடியாத ஆயுதக் கைகலப்பு ஒன்றுக்கு தயாராய் இருக்குமாறு பீகிங் விடுத்த ஒரு வேண்டுகோளை, ஜப்பானிய கம்யூனிஸ்டுகள் நிராகரித்து விட்டதாய் பொதுஜனப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட வட்டாரங்கள் கூறின.

ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி சுயேச்சையான முறையில் இயங்க விருப்பம் கொண்டிருப்பதாய் சீனக் கோரிக்கை நிராகரிப்பட்டதாக அவைமேலும் கூறின.

அமெரிக்காவுடன் சில ஆண்டுகளில் யுத்தம் ஒன்று தவிர்க்க முடியாதது என்ற நம்பிக்கையில், இதற்குத் தயாரான ஒழுங்குகளைச் செய்யுமாறு பீகிங் கேட்டிருந்தது. டோக்கியோ பொலிஸ் அதிகாரிகள் இவ்வாரம் நடத்திய தேசிய மகாநாட்டில் இதுஊர்ஜிதம் செய்யப்பட்டது.

பீகிங் ஆதரவுப்பாதையைச்செப்பனிட ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி முயன்று வருவதற்கான அறிகுறிகளும் வளர்ந்து வருகின்றன என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

வியட்னம் யுத்தம் ஒரு சீன-அமெரிக்க யுத்தமாக விஸ்தரிப்பதைத் தடுக்கும் பொருட்டு, வடவியட்னம், வடகொரியா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஒரு ஐக்கிய கம்யூனிஸ்ட் முன்னணியை நிறுவ ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி உத்தேசம் கொண்டிருப்பதாகப் பொலிஸ் தலைவர்கள் கருத்துக்கொண்டுள்ளனர்.

பி. டி. ஐ.

## 'ஜெமினி 9' ராக்கெட்டுடன் இணையும் முயற்சி தோல்வி

கேப்கென்னடி, ஜூன் 4

இருவீரர்களைக் கொண்ட 'ஜெமினி 9' அமெரிக்க வான் வெளிக் கப்பல், 4 மணி நேரம் பிரயாணம் செய்து அதன் இலக்கு ராக்கெட்டை அடைந்தபோதிலும், ராக்கெட்டுடன் இணைவதில் சிரமம் தோன்றியிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

172000 கிலோமீட்டர் தூரம் வரை இலக்கு ராக்கெட்டை விண்வெளி வீரர்கள் துரத்திச்சென்றனர்.

பீப்பாய் போன்ற ராக்கெட்டில் உள்ள பாதுகாப்பு உறை அவிழாமல் இருந்ததிஞலேயே இணைப்பு சாத்தியமாகவில்லையெனக் கூறப்பட்டது. ராக்கெட்டின் உறை விலகாமல் இருப்பதற்கு, அறிய முடியாத சக்தி ஒன்றுதான் காரணமாய் இருக்கமுடியும் என விண்வெளிப்பிரயாணிகளில் ஒருவர் கூறிஞர். இதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

இன்று 'ஜெமினி 9' கப்பலின் உச்சக்கட்ட நிகழ்ச்சி அமைகிறது. அதன் பிரயாணிகளில் ஒருவர் 2 1/2 மணி நேரம் அயனவெளியில் ஒரு மனிதக்கிரகமாக உலகைச் சுற்றி நடப்பதே அது.

இதற்கிடையில் ஐரோப்பிய வானவெளித்திட்டத்திலிருந்து பிரிட்டன் விலகிக் கொண்டுவிட்டது. 1970-ம் ஆண்டுக்குள் தகவல் தொடர்புக் கிரகம் ஒன்றை அனுப்பும் முயற்சியை இத்திட்டம் கொண்டுள்ளது. பெரும் பொருளாதாரச் செலவே பிரிட்டனின் நடவடிக்கைக்குக்காரணம் என்றும், இத்திட்டத்தில் 40 சதவிகித செலவை பிரிட்டன் பொறுக்கவேண்டியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

## மதப்பற்றும் உளத்தூய்மையும் குறைந்து வருகிறதே?

### காஞ்சிபீடக் குரு வருத்தம்

வேலூர், ஜூன் 4

"நாட்டில் ஒழுக்கம் குலைந்துவருகிறது. மக்களிடையே சமயப்பற்றும், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் தூய்மையும் குறைந்துவருவதே இதற்குக் காரணமென்று காஞ்சிபீடத் தலைவர் வேலூரில் பூஜைக்குப் பின் செய்த உபதேசத்தில் கூறிஞர்.

ஒருவனுக்குத் தெய்வத்திடம் நம்பிக்கை இருக்கலாம்; இல்லாமற்போகலாம். ஆனல் ஏதாவது ஒன்றிடம் நம்பிக்கையிருந்து, அவன் அதனிடம் மதிப்புக் காட்டிவந்தால் அதுவே போதுமானதாகும். சமண மதத்தையும் பௌத்தமதத்தையும் பின்பற்றுபவர்கள் நாட்டில் இப்போதும் இருந்துவருகிறார்கள். அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்றாலும் கூட அவர்களிடம் ஏதோ ஒரு நம்பிக்கை இருந்துவருகின்றது. மனிதகுலநல்வாழ்வை நோக்கமாகக் கொண்டு அதை அவர்கள் பரப்பிவருகிறார்கள் என்றார் பீடாதிபதி.

எல்லா வகுப்பினரும பக்தி மார்க்கத்தைப் பின்பற்றிக் காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழுதுவரவேண்டும். இதுசம்பந்தமாகக் குழந்தைகளுக்கு வருடந்தோறும் திருப்பாவை, திருவெம்பாவை நூல்கள் விநியோகிக்கப்பட்டு வருவது சரியே. மக்கள் வீண் சர்ச்சைகளில் இறங்காமல் தத்தம் மதானுஷ்டானங்களை ஒழுங்காகச் செய்துவரவேண்டும். மதம், மொழி ஆகியவற்றின் பெயரால் விரும்பத்தகாத சர்ச்சைகளில் ஈடுபட்டுள்ளனர். தெய்வ நம்பிக்கை உறுதியாயிருந்தால் இந்தச் சர்ச்சைகளும், தீமைகளும் தாமாகவே மறைந்து ஒழிந்துவிடுமென்றும் அவர் கூறிஞர்.

இளம் குற்றவாளிப் பள்ளிகளில் சமயப்பிரசாரம் செய்வதற்குப் பல வருஷங்களுக்கு முன்னர் ஏற்பாடு செய்தபோது, பாதிரிகளும் மௌலவிகளும் ஏராளமாக முன்வந்தனர். ஆனல் இந்து சமயப்போதகர்கள் அதிகம் பேர் முன்வரவில்லையென்பதை ஆசார்யார் சுட்டிக்காட்டிஞர். அவற்றில் படிக்கும் குழந்தைகளை ஒய்வு நேரத்தில் எங்கு போக விருப்பமென்று கேட்டபோது கிறிஸ்தவ குழந்தைகள் சேர்ச்சுக்கும், முஸ்லிம் குழந்தைகள் மசூதிக்கும் போக விருப்பம் தெரிவித்தார்கள். ஆனல் இந்து குழந்தைகளோ சினிமாவுக்குப் போவதில் ஆர்வம் காட்டிஞர்கள் என்று தாம் கேள்விப்பட்டதாகவும் இது தான் நம்மிடம் காணப்படும் சமயப்பயிற்சி என்றும் ஆச்சார்யார் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

---

### காமராஜர் ரஷ்யா செல்கிருர்

புதுடில்லி, ஜூன்4

காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் வருகிற21-ந்திகதி மாஸ்கோ சென்று, 10 நாள் ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்வாரென அறிவிக்கப்படுகிறது.

பின், செக்கோஸ்லவேகியா, யூகோஸ்லேவியா, கிழக்கு ஜெர்மனி உட்பட இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இவர் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

காமராஜருடன் தமிழ் நாட்டு மந்திரி திரு வெங்கட்ராமனும் செல்கிருர்.

---

### சுதந்திரா — ஜனசங் தேர்தல் உடன்பாடு

புதுடில்லி, ஜூன் 14

வரப்போகும்பொதுத்தேர்தலைமுன்னிட்டுசுதந்திராகட்சியும்ஜனசங்கமும் தொகுதி உடன்பாடுஒன்றைச் செய்துகொள்ள கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

தொகுதிகளில் போட்டியிடுவதுபற்றிஒவ்வோர் ராஜ்யத்திலும் இக்கட்சிகளைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் முடிவு செய்வார்கள்.

வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்க எல்லா எதிர்க் கட்சிகளும் ஒரு ஐக்கியமுன்னணி அமைப்பதை தாம் விரும்புவதாக இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தலைவர் திரு ஈ எம் எஸ் நம்பூதிரிபாத் கூறிஞர்.

கேரளத்தில் வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளும், முஸ்லிம் லீக்கும் ஒன்றுபட்டிருப்பதை தாம் வரவேற்பதாகவும் அவர் கூறிஞர்'

## மாஸே துங்கின் சீனவில் . . .

பீகிங், ஜூன் 4

சீனத்தலைவர் மாஸேதுங் இதய நோயிஞலும் முதுமையிஞல் ஏற்படும் அறிவு மந்தத்திஞலும் கஷ்டமுறுவதாக சமீபத்தில் சீன சென்றிருந்த பிரபல ஜப்பானிய அரசியல்வாதி மட்ஸுமுரா தெரிவிக்கிருர்.

அதேசமயம் மாவின் கொள்கைகளுடன் மாறுபட்டதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் பீகிங் பிரிவு முதல் காரியதரிசியும் பீகிங் மேயருமான பெங்சென் பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிருர், இவர் சீனத் தலைவர்களின் வரிசையில் 6 வது ஸ்தானத்தைவகித்தார். மாஸேதுங்கின் பழைய சகாவும் அவரது உள்வட்டாரத்தில் ஒருவருமான பெங்சென் கடந்த 2 மாதங்களாக வெளியில் காணப்படவில்லை என்றும் மாவுக்கெதிராக இவர் குற்றஞ்சாட்டப்பட்டார் என்றும் மேலும் கூறப்பட்டது. பதவி நீக்கம் பற்றி கேட்டவுடன் ஆயிரக்கணக்கான சீனர்கள் மாவின் உருவவப்படத்துடன் ஊர்வலம் சென்றனர்.

பீகிங் பல்கலைக்கழக அதிபர் லூபிங், அவரது உதவியாளரான ஒரு [illegible] நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஆணவம் முற்றாக நீங்கும் போதுதான் கடவுளின் அருளும் கிடைக்கமுடியும். ஆணவமும் திமிரும் அவரவர்களையே வாட்டும். நம் ஆணவத்தை நீக்குமாறு இறைவனை மனமாரப் பிரார்த்தித்தால் மனம் சுத்தமாக வழி பிறக்கவும், இறையருள் கிடைக்கவும் முடியும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily. Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 319

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 23 உ (5-6-66)


## நல்ல சந்தர்ப்பம்

ஐவுளி விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் அமுலுக்குவந்துவிட்டது. பொதுமக்கள் இத்திட்டத்தை வரவேற்று ஆதரிக்கிறார்கள். வர்த்தகர்கள் எதிர்க்கிறார்கள். எதிர்ப்பார்கள்தான். ஆனால் இத்திட்டத்தின் நோக்கத்தையும் அதனால் பொதுமக்களுக்கும் நாட்டின் நலனுக்கும் ஏற்படக்கூடிய நற்பயனையும் கருதி வர்த்தகர்களும் நிலைமைக்கேற்ப தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொண்டு அதற்கேற்ற முறையில் நடந்து கொள்வதுதான் விவேகம். அரசாங்கத்தின் பகைமையையும் பொதுமக்களின் எதிர்ப்பையும் சம்பாதித்துக்கொண்டு வர்த்தகர்கள் எதுவும் செய்யமுடியாது.

ஐவுளிகளுக்கு விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதன் மூலம், வாழ்க்கைச் செலவு குறையவும், அந்நியச் செலாவணியைமிச்சப்படுத்தவும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், வேலையில்லாப் பிரச்னையை ஓரளவுகுறைக்கவும் நல்ல வாய்ப்புஏற்பட்டுள்ளது. இந்த நல்ல நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஆற்றலும் வசதியுமுடைய நமது வர்த்தகர்களும் ஒத்துழைப்பும் உதவியுமளிக்க முன்வரவேண்டும். உள்நாட்டில் ஐவுளி உற்பத்தியை அதிகரிக்கவும் அந்நியச்செலாவணியை மிச்சப்படுத்தவும் வேலையில்லாப் பிரச்னையைக் குறைக்கவும் நாடுமுழுவதிலும் ஆயிரம் கைத்தறி நெசவு நிலையங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு முன்னரே நமது வர்த்தகர்கள் பலர் தமது சொந்த மூலதனத்தில் நெசவு நிலையங்களை நிறுவி கைத்தறித்துணிகளை உற்பத்தி செய்து வருகின்றனர். இன்று விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளதாலும் ஐவுளி இறக்குமதி செய்யும் உரிமை படிப்படியாகக் குறைந்து வருவதாலும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் வர்த்தகர்கள் முன்வந்து ஈடுபடுவது நல்லது. இதேசமயம் நெசவுத் தொழிலுக்கு வேண்டிய நூல் தாராளமாகக் கிடைக்கவும் உள்நாட்டு உற்பத்தித்துறையில் ஈடுபடுபவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

திருக்கோணமலைமாவட்டத்தின் பெரும்பகுதியும் அம்பாந்தோட்டை, முருங்கன் ஆகிய பகுதிகளும்பருத்திச் செய்கைக்கு மிகச் சிறந்த இடமென்னக் கருதப்படுகிறது. இப்பகுதிகளில் அரசாங்கமோ அல்லது அரசாங்க ஆதரவுடனோ பருத்திச்செய்கை பண்ணவும் நூல் உற்பத்தி ஆலைகளை நிறுவவும் முயற்சிஎடுக்கப்பட வேண்டும். பொது ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் வர்த்தகர்களும்கூட, இந்தியாவில் போன்று கதர் இயக்கம், நூல்நூற்பு இயக்கம் ஆகியவற்றை இங்கு வீடுதோறும் ஆரம்பிக்க முன்வந்து முயற்சி செய்வது - தேசிய உணர்ச்சியை உருவாக்கவும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி. பொருளாதாரவிருத்தி ஏற்படவும் வழிபிறக்கும். நமது நாட்டின் சரித்திரத்தில் புதியஅத்தியாயம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இதுநல்ல சந்தர்ப்பம்.

## தென்கிழக்காசிய ஒற்றுமை

மலேஸியாவை ஒழிக்கும் இந்தோனேஷியாவின் கொள்கை மாறிவிட்டது. ஒழிக்கும்கொள்கையைக் கைவிட்டு தங்கள் நாடுகளுக்கிடையில் பொருளாதாரம் மற்றும் பரஸ்பர அபிவிருத்திகளில் ஐக்கியமாக ஒத்துழைப்பதென பாங்காக்கில் மூன்று தினங்கள் நடைபெற்ற சமாதான மகாநாட்டில் இந்தோனேஷியா, மலேஸியா, தாய்லாந்து பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் ஒப்புக்கொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதன் விபரம் எதுவும் தெரியவில்லை. எனினும் இந்த நல்ல சூழ்நிலை நம்பிக்கையும் மகிழ்ச்சியுமளிப்பதாகும்.

இந்தோனேஷியா. மலேசியாதகராறு தீர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர ஒற்றுமையும் நல்லெண்ணமும் ஏற்படவேண்டுமென விரும்பிய மக்களுக்கு இவ்விரு நாடுகளுக்கிடையில்மட்டுமல்ல பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலும் ஐக்கியம் ஏற்பட வழிபிறந்துள்ளது.

இந்த ஐக்கிய முயற்சியும் ஒத்துழைப்பு முயற்சியும் நான்கு நாடுகளுக்கிடையில் மட்டும் நின்றுவிடாது தென்கிழக்காசிய நாடுகள் அனைத்துக்கிடையிலும் ஏற்படவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது கடினமல்ல. தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்கு இராணுவக் கூட்டுகளில் கட்டுப்பட்டுள்ள நாடுகள் அவைகளிலிருந்து விலகவேண்டும்; தென்கிழக்காசியாவிலுள்ள அந்நிய இராணுவத் தளங்களும் வெளியேற்றப்படவேண்டும்.

## உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு தொல்புரம் மத்தி ஆதி முத்துமாரி அம்மன் கொடியேற்றம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து ஒன்பது நாட்கள் உற்சவம் நடைபெறும். 11-ந் தேதி சனிக்கிழமை பொங்கல் விழாவுடன் உற்சவம் முடிவடையும்.

# சக்தி வழிபாடு

— சுவாமி ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்தா —

நயினாதீவு, சனி

சென்ற வெள்ளிக்கிழமை மாலை சுவாமி ஸ்ரீரங்கானந்தா அவர்கட்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில்வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்பைத் தொடர்ந்து சுவாமி அவர்கள் 'சக்தி வழிபாட்டின் மகிமை' என்ற பொருள் பற்றி மிகச் சிறப்பாகச் சொற்பொழிவாற்றினார். அதன் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

''உலக வாழ்விலே ஈடுபட்டிருக்கும் மக்கள் தாம்தாம் எப்படி எப்படியெல்லாம் தமது மனநிலையை அமைத்துக்கொண்டு வாழ்கிறார்களோ அப்படி அப்படியே அவர்கள் வாழ்வும் முடிவாகிறது என்றார். அன்பும் அறமும் உடையவனது வாழ்வு நல்வாழ்வாக மிளிர்கிறது. ஆணவமும், அகங்காரமும் குடிகொண்டவனது வாழ்வு துன்பமாக முடிகிறது. நம்மிடத்திலே இருக்கின்ற தெய்வீகத்தன்மையை வளர்த்தால் நாம் தேவர்களாவோம் அசுரத்தன்மையை வளர்த்தால் அசுரர்களாவோம். தெய்வீகத்தன்மையை வளர்ப்பதற்குத் தெய்வவழிபாடு அவசியமாகிறது. தெய்வ வழிபாட்டில் சக்திவழிபாடு சிறந்தது. தாய்மை என்பது உலகத்திலேயே சிறந்த தன்மைகளை எல்லாம் தன்னகத்தே கொண்டது. இந்தத் தாய்மையிலே தான் சத்தியின் தன்மைகளை எல்லாம் கண்டார்கள் நம் முன்னவர்கள். சக்தி வழிபாட்டை, செல்வத்தைத் தரும் சக்தி, கல்வியைத் தரும் சக்தி, வீரத்தைத் தரும் சக்தி என மூன்றாகப் பிரித்து நாம் வழிபடுகிறோம். பாரகம் முழுமையும் பரந்திருக்கும் பராசக்தியே இவையெல்லாவற்றையும் நடத்திவைக்கிறாள்.

உலகத்து வாழ் உயிர்கள் யாவும் அந்த ஜெகன்மாதாவின் அருட்குழந்தைகள். நாம் எதைக் கேட்கின்றோமோ அதையெல்லாம் அவள் தருவாள். ஞானக் குழந்தை ஞானசம்பந்தன் அழுதபோது திருமுலைப் பால் சுரந்தளித்து, தேவாரம் பாடும் திறனும் தந்தவள் நம் தாயல்வா? நாகரிகப் படாடோபங்களிலே ஈடுபட்டிருக்கும் நாம் கோயில்களிலே சென்று வழிபடும் முறையே மாறிவிட்டது. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்றவர்கள் எந்த உயிரிடத்தும் தாய்மையின் தன்மையையும், சக்தியின் தோற்றத்தையும் கண்டனர்: மனம் ஒன்றி வழிபாடு செலுத்தினர். கோயில்களிலும் வழிபாட்டிடங்களிலும் இருக்கும் விக்கிரகங்களில் கடவுளையே கண்டனர். ஊனக் கண்ணுடைய நாம் வெறும் கல்லென்று எண்ணுகின்றோம். சக்தியைக் காளியாயாக வழிபட்டார் பரமஹம்ஸர். அவரின் பக்தித் திறத்தினால் பராசக்தியை நேரில் கண்டும் பேசியுமுள்ளார். அர்ச்சுனன், இராமர் போன்றோர் எல்லோரும் போர்முனைக்குச் செல்லு முன்னர் சக்திவழிபாடு செலுத்திச் சென்றார்கள். இதனாற்றான் போரில் வெல்லும் வல்லமையும் பெற்றார்கள். தாய்மையின் தன்மைக்கு ஈடேது. இணையேது? அவள் சந்நிதானத்தில் உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு எதுதான் கிடைக்காது? வெளிவேஷதாரிகளாக நாம் இருந்துவிட்டாற்போதாது. உள்ளன்புடையவர்களாக மனப் பரிசுத்தமுடையவர்களாக இருக்கவேண்டும். துன்பம் வந்தபோதும் இன்பம் வந்தபோதும் தெய்வ நாமங்களை உச்சரிக்கும் பழக்கம் வேண்டும். எந்த நிலையிலும் தெய்வத் தொடர்பை நாம் விட்டு நீங்கலாகாது. ஈஸ்வரி, தாயே, பராசக்தி என்ற நாமங்களை நாம் அடிக்கடி உச்சரிக்கவேண்டும்.

தற்காலத்தில் இவற்றை உச்சரிக்கவும், தெய்வப் பணி செய்யவும் நமக்கு வெட்கமாக இருக்கின்றது. பொதுவாகச சைவசமயத்தவர்களாகிய எங்களுடைய வழிபாட்டு முறையே சிதைந்துவருகிறது. கோயில்களிலே அமைதியின்மையும் துப்புரவின்மையும் கூடிவிட்டது. வழிபாட்டு நேரங்களிலே வீண்வார்த்தைகளும் விதண்டாவாதமும் செய்கிறோம். இந்த நிலை முற்றாக மாறவேண்டும். வழிபாடு செய்பவர்களாகிய நாம் கோயில்களின் தூய்மையிலும் தெய்வீகத் தன்மையிலும் அக்கறை காட்டவேண்டும். அப்போதுதான் நம் வாழ்வு வளம்பெறும். இந்தநிலை நமது சமயத்திலே கட்டாயமாக ஏற்படவேண்டும். அப்போதுதான் மக்களுக்குப் பக்திமார்க்கத்தில் மனம் படியும்.''——

(5-ம் கலத் தொடர்ச்சி)

சுமார் ஏழாயிரம் பேருக்கு மேலுள்ள அத்தீவிலே அநேகமாக எல்லாருமே சைவர்களாம். தங்கள் தீவுக்குப் புனிதயாத்திரையாக பயபக்தியுடன் வரும் அந்த பௌத்த அன்பர்களை அன்புடன் வரவேற்று அம்மையின் அருள் அவர்களுக்கும் கிடைக்கும்படி, அச்சைவ சமூகத்தவர் அன்புடன் செய்யவேண்டாமா? அங்கு பல இளம் 'சைவச் சிங்கங்கள்" சமரச நோக்கத்துடன் அன்புத்தொண்டாற்றுவதைக் கண்டேன். அவர்கள் இப்புனித சேவையில் இனியாவது ஈடுபடவேண்டுமென்றே இதை இங்கு எழுதுகின்றேன்.

புத்தர் பெருமானும். நாகபூஷணி அம்மையும் நமது சமய, சமூகப்பிரச்னைகளைத் தீர்க்க அங்குகோவில் கொண்டு காத்திருக்கையில் அதைப் பயன்படுத்தாமல் எவ்வளவு காலம் நாம் இப்படி அலட்சியமாகத் தூங்கப்போகிறோம்.

ஃ ஃ ஃ

சுவாமி ஸ்ரீரங்கானந்தா அவர்களின் இருமணி நேரச் சொல்மாரி, அங்கு கூடியிருந்த எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. பிரசங்கம் முடிந்ததும் பல தாய்மார்களும் பக்தியுடனே சுவாமியைவணங்கியகாட்சி உள்ளத்தை உருக்கியது.

சென்ற மூன்றுநாட்களாக சுவாமிகள் யாழ்ப்பாணத்திலும், சில பள்ளிக்கூடங்களிலும் செய்த ''ஞானயக்ஞம்'' பெரும் பயனளித்தது. இவ்வித துறவிகள் அடிக்கடி இப்பகுதிகளுக்கு வந்து, சமய விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டுமென்று பல அன்பர்கள் ஆவல் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் அமைக்கப் பெற்றுள்ளதால் இனி இவ்வித பணி இப்பகுதியில்அதிகரிக்க வாய்ப்புக் கிடைக்குமென்றே நம்புவோம்.

ஃ ஃ ஃ

மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந்தேவி
கேள், பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீ
பரிவெய்திடேல், ஆனைமாமலை யாதியாய இடங்களிற்
பல அல்லல்சேர், ஈனர்கட் கெளியேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே;

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

# ஐயாறன் எழுதுவது

சற்றும் எதிர்பாராத முறையிலே முந்தாநாள் நயினைக்குச் சென்றேன். அந்தத் தெய்வீகத் தீவுக்கு சுவாமி ஸ்ரீரங்கானந்தா அவர்கள் முதல்முதலாக வருவதாயும் அவர்களுடன் வருமாறும் அன்பழைப்புக் கிடைத்தது. செல்லவேண்டுமென்று மனதில் ஆசை. ஆனால் ஆபீஸ் கடமைஇடம் தருமா? அங்கு செல்வதும் கூட ஒருவிதத்தில் ஆபீஸ் கடமைதானே என்று உள்ளிருந்து யாரோ இடித்துச் சொன்னதும் புறப்பட்டுவிட்டேன்.

வழியிலே பல ஸ்பெஷல் பஸ்ஸுகள் நிறைய சிங்கள பௌத்த யாத்திரிகர்கள் நயினையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. போஸன் பௌர்ணமி விரதத்தை அநுராதபுரத்தில் கழித்துவிட்டு, மறுநாள் நாகதுவிபத்துக்கு யாத்திரை வருகிறார்கள் அன்றுதான் மணிமேகலை, மணிபல்லவம் என்று கூறப்படும் நயினைக்கு வந்து, அக்ஷய பாத்திரம் பெற்று தமிழகம் திரும்பி பலருக்கும் பசிப்பிணியாற்றினாராம். மணிமேகலையின் அந்தப் பாத்திரம் என்ன ஆயிற்றோ தெரியவில்லை. இப்போது மீண்டும் அவர் நயினைக்கு வந்து இவ்வித பாத்திரம் பெற்றுச் சென்று இந்திய உணவுப் பஞ்சத்தை நீக்கினால் பிரதமர் இந்திராவின் தலையிடி பெரிதும் நீங்குமே என்று தோன்றியது. ஆனால் அதெல்லாம் வெறும் கதைதானா?

ஃ ஃ ஃ

மோட்டார் படகுக்காரர்களுக்கு மூன்று நான்குநாட்களும் நல்ல வருமானம். ஒரு பெரிய படகில் 400பேர் வரை ஏற்றிச்செல்லுகின்றனர். பலமான காற்று. கடல் கொந்தளிப்பு. படகு கவிழ்ந்துவிடுமோ என்று உள்ளூர ஒருவித பயம். ஆனால் கருணையே உருவான நாகபூஷணி காப்பாள் என்ற நம்பிக்கை மற்றொருபுறம்.

படகு புறப்படும்போதும் நயினைக்கு வந்து சேர்ந்த போதும் அந்தச் சிங்கள யாத்திரிகர்கள் ''சாது சாது'' என்று கோஷம் செய்து, அமைதியாக இறங்கி நடந்துசென்றனர். எதிரே நாகபூஷணி அம்மை தம் அழகான கோவிலிலிருந்து அருட்கடாட்சம்செய்து கொண்டிருந்தார். ஆலய கோபுரமும், மணியும் ''வருக, வருக'' என்று அழைத்தன. வந்த யாத்திரிகர்களை கதிர்காமத்தில் செய்வதுபோல், கோயில் வாசலில் திருநீறும் சந்தனமும் இட்டு ''ஹரோஹரா'' மந்திரம் சொல்லச்செய்து அம்மையின் தத்துவத்தை சிங்கள மொழியில் விளக்கும் பிரசுரங்களை வழங்கி கோவிலுக்கு அழைத்து அருட்பிரசாதமளிப்பின் எவ்வளவு நன்றாக இருக்கும். இந்து - பௌத்த, தமிழ் - சிங்கள ஒற்றுமையையும் நட்புறவையும் எவ்வளவு பலப்படுத்தலாம்!

ஆனால் அந்த யாத்திரிகர்கள் கோவில் எல்லைக்கு வெளியிலேயுள்ள பாதை வழியே புத்தவிகாரைக்கு அவசர அவசரமாக நடந்து சென்று விகாரையில் அரை மணி நேரம் கழித்துவிட்டு, உடனே படகுத்துறைக்கு வந்த வழியே திரும்பிவிடுகின்றனர். ஒருசிலரைத் தவிர மற்றவர்கள் கோவில் பக்கம் வரவில்லை. வருமாறு அழைக்கவும் ஆளில்லை! சமய, சமூக சமரசத்துக்கான மிகநல்ல சந்தர்ப்பம் வீணாக்கப்படுவதாக எனக்குத் தோன்றியது.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனருள் பெறுவதற்கு நாம் தேவாரம் பாடவேண்டும்

## வைத்தீஸ்வரா கூட்டத்தில் ஸ்ரீரங்கனானந்தாஜீ அறிவுரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சைவம் வளர்வதற்கு நிலை பெறுவதற்குக் காரணமாக விருந்தவர் திருஞான சம்பந்த மூர்த்திகள் தான். அவரது தேவாரங்களை நாம் மனதில் நினைக்குந்தோறும், மனமுருகிப் பாடும் பொழுதும் சிவ பெருமானின் கிருபை நம்மை வந்தடைகிறது. திரைப்படங்களைப் பார்ப்பதையும் வீட்டில் திரைப்படப் பாடல்களை பாடுவதையும் தவிர்த்து தேவாரங்களை நாம் இசைக்க வேண்டும் நமது வீடுகளில் தேவாரங்கள் ஒலிக்க, ஒலிக்க சிவனின் அருளும் கிடைக்கத்தொடங்கும்"

வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று ஸ்ரீமத் ஸ்ரீரங்கனானந்தா சுவாமிகள் பேசுகையில்மேற்கண்ட அறிவுரைகளைச் சொன்னார்.

"திருஞான சம்பந்தர்" பற்றி அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"சிவ தொண்டர்களாகிய நாம் திருஞான சம்பந்தரை மெய்யுருகிப் பாடும் பொழுதும் அவரை நினைக்கும் பொழுதும் அவரது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதும் எமது உள்ளம் பாவ இருளிலிருந்து மறைந்து விடுகிறது.

ஞானசம்பந்தர் ஞானப் பால் உண்டதால் அவர் ஞானம் பெற்றார். ஏன் மற்வர்களும் இந்தப் பேறை அடைய முடியாதா] என்று நீங்கள் கேட்கக்கூடும். ஏன் முடியாது? சிவனின் அனுக்கிரகம் கிடைத்தால் இப்பயன் எமக்கு நிச்சயம் கிடைக்க முடியும். ஆனால் நமக்கு ஞானம் உண்டாக வேண்டுமே! ஞானம் என்பது கடவுளின் புனிதமான அருளாகும். தூய்மையான மனதுக்குத்தான் ஞானம் உண்டாக முடியும்:

ஞானசம்பந்தர் அருளிச் சென்ற செல்வங்கள் இம்மையிலிருந்து மறுமைக்கும் எம்மை இழுத்துச் செல்வன சைவத்தை வளர்த்து, உலகில் சைவசமயத்துக்கு பெருமையும் புகழையும் தேடிக் கொடுக்க ஞானசம் பந்த பிரானின் கவிகள் இனிமை மிக்கவை: அவர் பாடிய தேவாரங்கள், தமிழ்ப் புலவர் வித்துவான்களின் கவிகளையும் மிஞ்சுபவன ஞான சம்பந்தரின் தேவாரங்களில் கவிகளில் பக்தியும் இனிமையும் புதைந்து கிடக்கின்றன. அவர் பாடிய கவிகள் கவிகளுக்காக மட்டும் பாடப்படவில்லை. ஞானத்துக்காகவும் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்காகவும் பாடப்பட்டன. அவரது தேவாரங்களை நாம் பாடும் தோறும் அவர் எந்த உள்ளத்தைக் கொண்டு பாடினாரோ அந்த உள்ளத்தை அந்தமனோபாவத்தைஅடைகின்றோம். ஆனால் நாம் புனிதமுள்ளவர்களா?

நாம் புனிதமடைவதற்கு என்ன செய்யவேண்டும்.

அழுக்காறிலிருந்து எமது உள்ளம்தூய்மைபெறவேண்டும். அதற்கு முன்னோடியாக நமது நாடு புனிதமடைய வேண்டும். "நமச்சிவாயா... நமச்சிவாயா..." என்று நாம் சொல்லும் தோறும் எமது நா புனித மடைந்து விடுகிறது.

சைவர்களாகிய நாம் எமது வழிகாட்டியான ஞான சம்பந்தரை நாள் தோறும் நினைக்கவேண்டும்

அவரது தேவாரங்களை இனிமையுடன் பாடுவதால் நாம் இறைவனடி போய் சேரமுடியும் வீடுகளில் திரைப்படப் பாடல்களைப் பாடுவதை நிறுத்தி—சினிமா பார்ப்பதை ஒழித்து சிவனடி போய்ச்சேரவழிகாணவேண்டும் இதற்கு ஞானசம்பந்தரின் நாமம் நமது வீடுதோறும் ஒலிக்கட்டும்"

ஓய்வுபெறும்

## ஆசிரியருக்குப் பாராட்டு

உரும்பராய், சனி

"ஒரு நாடு முன்னேறப் பாடசாலைகள் அவசியம். பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு தலைமையாசிரியரின் சேவை மிக முக்கியமானது வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலையை உன்னத பதவிக்குக்கொண்டுவந்த பெரியார்களுள் தற்போதைய தலைமையாசிரியர் திரு. சி. பொன்னுத்துரையை விசேஷமாகக் குறிப்பிடலாம். இம்மாத நடுப்பகுதியில் இளைப்பாற இருக்கும் திரு. சி. பொன்னுத்துரையை பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது உரும்பராய்ப் பொதுமக்களது முக்கிய கடமைகளில் ஒன்றாகும்."

மேற்கண்ட தீர்மானம் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் நிறைவேறியது. சங்கத் தலைவர் திரு. அ. இளையதம்பிதலைமை தாங்கினார்.

உரும்பராய்த் தொடர்பு நிரம்ப உள்ளவராகவும் போதிய அனுபவம் உள்ளவராகவும் சைவசமயாபிமானம் பூண்டவராகவுமுள்ள ஒரு சிறந்த தலைமையாசிரியரை திரு. பொன்னுத்துரையின் இடத்துக்கு நியமிக்குமாறு வித்தியாபகுதியைக்கேட்பதெனற மற்றுமொரு தீர்மானதும் நிறைவேறியது.

## "ஆசிரியர் கலையை வளர்த்தனர்"

பரந்தன், சனி

அந்நியர் ஆட்சியில் நாடு சிக்கிக்கிடந்த காலத்தில் நமது கலையும், கலாசாரமும் வளர்ச்சிபெற வாய்ப்பற்று மங்கிக்கிடந்தது. இத்தகைய இருள்சூழ்ந்த காலத்தில் நமது தேசியக் கலை, கலாசாரத்தைப் பல இன்னல்கள் மத்தியில் பேணி வளர்த்து இன்றைய சுதந்திர சந்ததியினருக்குத் தந்த பெருமை தமிழ்-சிங்கள ஆசிரியர்களையே சார்ந்ததாகும். இவ்வாறு முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலை மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் சிறப்புக்கூட்டம் செல்வன் வ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது ஆசிரியர்கள் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டிதர் திரு. ச. சதாசிவம் கூறினார் இக்கூட்டத்தில் மதுபானத்தால் விளையும் தீமைகள் பற்றி செல்வன் சோ. சுந்தரலிங்கம் உரையாற்றினார்.

## புதிய ஜே. பி.



புங்குடுதீவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் நொத்தாரிசுமாகிய திரு. பசுபதிப் பிள்ளைகதிரவேலு சமாதான நீதவானாகவும் உத்தியோகப் பற்றற்ற நீதிபதியாகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் புங்குடுதீவில் இருபத்தைந்து வருடகாலமாக கிராம சபைத் தலைவராகவும் கல்வி வளர்ச்சி, சமய வளர்ச்சிக்காக உழைத்த திரு வ. பசுபதிப்பிள்ளையின் மகனாவார். திரு கதிரவேலு பாடசாலை முகாமையாளராயிருந்ததுடன் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில், கிராஞ்சி கந்தசுவாமி கோயில், மடத்துத்துறை பிள்ளையார் கோயில் முதலிய தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாக்களில் ஒருவராகவும் தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவராகவும்புங்குடுதீவு பயிர்ச்செய்கைக் குழுத்தலைவராகவும், புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், யாழ் மாவட்ட மக்கள் குழுவின் அங்கத்தவராகவும் வடபகுதி கூட்டுறவு மேற்பார்வைச்சபை அங்கத்தவராகவும் கடமையாற்றிவருகின்றார்.

## யாழ். நகரவிருத்தி ...

(1- பக்கத் தொடர்ச்சி)

திடீர் சீர்திருத்தம்

யாழ்ப்பாண நகரின் முக்கியதேவைகளான பஸ்நிலயச் சீரமைப்பு, வசதியான சந்தை, மின்சார விநியோகம், சுகாதார சேவை ஆகியவைகளில் மூவர் கமிஷன் அதிக கவனம் செலுத்துமென்றும் உடனடியாக பல்வேறு அரசாங்க இலாகாக்களுடனும் தொடர்பு கொண்டு சீரமைப்பு வேலைகள் தொடங்கப்படுமென்றும் அறியப்படுகிறது. இவ்வாரத்துக்குள்ளேயே சில அவசரச் சீர்திருத்தங்கள் நடைபெறலாம். பஸ்நிலையத்தில் பஸ்கள் புறப்படும் நேரம். இலக்கம் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமெனவும் தெரிகிறது.

## தென்வியட்னாமில் மேலும் நெருக்கடி

சைகோன், ஜூன் 4

தென்வியட்னாமில் வருகிற செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலைப் பகிஷ்கரிக்கவில்லை என்று திவறை பௌத்தர்கள் முடிவு செய்திருப்பதால், அங்கு நிலைமை மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. நேற்று 6-வது பிக்குணி தீக்குளித்தார்.

## இரு சிங்கள்

லண்டன், ஜூன் 4

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு சுவர்ண்சிங் பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சனை நேற்றுச் சந்தித்தார். உதவி வெளிநாட்டுமந்திரி தினேஷ் சிங் ஜெனிவா வழியாக கெய்ரோ புறப்பட்டிருக்கி[illegible] அவர் சந்திப்பார்.

## பொலிஸ் நிலையத்தில் தாக்கியதாக வழக்கு

### எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, சனி

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி பருத்தித்துறைப்பொலிசார் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி தம்மை அழைத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி இராஜேஸ்வரன் தன்னைத் தாக்கியதாக பருத்தித்துறையைச் சேர்ந்த து. இரத்தினவேலாயுதம் தனிப்பட்ட முறையில் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. பி. ஆர். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரியின் வழக்கறிஞர் திரு. எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணைசெய்யும் போது இரத்தினவேலாயுதம் கூறியதாவது:- "என்னை கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி பொலிஸ் நிலயத்தில் வைத்து பொ. அருளானந்தம், இ, சின்னப்பு, தி. துரைராசா ஆகியோர் முன்னிலையில் 'டேய் நீதான் பொலிசாருக்கு எதிராக ஏ. எஸ். பி.க்கு பெட்டீசம் போட்டது. மீன் வெட்டுகிறமாதிரி வெட்டி அனுப்புவேன்' பருத்தித்துறையில் இருக்கவேகூடாது. ஓடிவிடவேண்டும்' எனச்சொல்லி எனது இடது கன்னத்திலும், முதுகிலும் கைகளால் அடித்தார். நான் இச்சம்பவத்தை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் என்னை ஆஜராக்கும்பொழுது அவரிடம் கூறினேன். அவர் ஆஸ்பத்திரிக்கு செல்லுமாறு உத்தரவிட்டார். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் வைத்திய அதிகாரியினால் பரிசோதனை செய்யப்பட்டேன்".

திரு. இ. சின்னப்பு, டாக்டர் சோமசுந்தரம் காங்கேசன்துறை ஏ. எஸ். பி. காரியாலய உத்தியோகத்தர் ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் எதிரியை சுற்றவாளியாகக் கண்டு விடுதலைசெய்தார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு, வி. செல்லத்தம்பி, திரு. என். நடராசா, திரு. கே. இரத்தினசிங்கம். திரு. கே. கே. பாலசுப்பிரமணி, திரு. பெ. சுந்தரலிங்கம். திரு. க. கணபதிப் பிள்ளையின் அனுசரணையுடன் திரு. எம். சிவசிதம்பரம் ஆஜரானார். வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் திரு. ம. வேலும்மயிலும் ஆஜரானார்.

## தேர் வெள்ளோட்டம்

கோண்டாவில், சனி

கொக்குவில்நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இம்மாதம் 13-ந் திகதிகாலை நடைபெறவிருக்கிறது.

## நீங்கள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது பரிசு

08 X 0725 ரூ. 4,334

தலா ரூபா 216-70 ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 06 E 0537 | 05 C 0286 |
| 14 V 0267 | 08 M 0725 |
| 02 J 0809 | 08 B 0498 |
| 05 X 0334 | 10 Q 0316 |
| 10 W 0561 | 04 E 0605 |
| 14 D 0557 | 15 L 0151 |
| 09 U 0844 | 14 L 0746 |
| 01 C 0245 | 08 J 0371 |
| 07 P 0301 | 03 H 0498 |
| 07 I 0618 | 03 E 0379 |
| 16 Q 0664 | 10 K 0519 |
| 11 K 0703 | 02 B 0399 |
| 04 D 0018 | 03 S 0815 |
| 03 Q 0405 | 06 G 0060 |
| 15 C 0804 | 01 J 0429 |
| 13 Y 0261 | 05 Y 0686 |
| 01 C 0053 | 16 N 0416 |
| 01 S 0315 | 05 H 0204 |
| 13 K 0379 | 15 M 0754 |
| 12 N 0408 | 04 X 0975 |
| 10 F 0361 | 08 C 0275 |
| 03 V 0476 | 05 H 0404 |
| 13 D 0575 | 05 V 0710 |
| 14 F 0451 | 03 N 0041 |
| 04 X 0341 | 14 N 0970 |
| 06 K 0029 | 02 S 0378 |
| 10 X 0399 | 06 U 0872 |
| 07 P 0079 | 09 F 0644 |
| 17 F 0753 | 14 Q 0794 |
| 02 R 0595 | 04 O 0571 |
| 16 J 0217 | 06 Q 0117 |
| 11 E 0298 | 05 A 0958 |
| 12 K 0752 | 10 M 0070 |
| 05 E 0500 | 01 W 0672 |
| 15 T 0181 | 03 Y 0435 |
| 17 F 0447 | 08 O 0108 |
| 07 Z 0095 | 08 K 0944 |
| 02 V 0001 | 12 W 0728 |
| 13 H 0528 | 02 N 0985 |
| 09 E 0849 | 10 U 0050 |
| 13 J 0316 | 14 R 0332 |
| 14 U 0087 | 12 V 0068 |
| 09 H 0621 | 14 C 0670 |
| 11 J 0901 | 05 Y 0687 |
| 15 O 0671 | 04 F 0800 |
| 05 H 0134 | 17 L 0840 |
| 15 N 0809 | 08 N 0602 |
| 03 Z 0343 | 12 N 0474 |
| 04 H 0489 | 04 Y 0628 |
| 17 F 0270 | 02 G 0447 |

வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்.
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

★ வலிமை
★ குளிர்மை
★ சிக்கனம்
இவற்றிற்கு

பிரசித்தி பெற்ற யானை மார்க்
அஸ்பெஸ்ரஸ்
கூரை சீற்றுக்களையே உபயோகியுங்கள்.
கிடைக்குமிடம்:
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

# நாடும் நாமும்

## உள்வயிற்றைப் படம் பிடிக்கும் கருவி!

மனித வயிற்றுக்குள் என்ன நடக்கிறது? என்பதைப் பார்த்திருக்கிறீர்களா? நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மன் டாக்டர் அடால்ப் குஸ்மால், இதற்கு ஒரு தந்திரம் செய்தார். சர்க்கஸில் கூர்மையான வாளை விழுங்கி வேடிக்கை காண்பிக்கும் ஒரு வீரரை அழைத்தார். மற்ற டாக்டர்களின் முன்னிலையில் அவரை ஒரு குழாயை விழுங்க வைத்து அதன்மூலம அவரது வயிற்றுக்குள்என்ன நடக்கிறது, என்பதைப் பார்த்தார்.

இதன் பின்னர் வயிற்றின் உட்புறத்தைப் பார்க்கும் கருவியைக் கண்டுபிடிக்க 40 ஆண்டுகளாயின. இக்கருவியில் மென்மேலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன எனினும் வயிற்றுக்குள் தெளிவாகப் பார்க்க இயலவில்லை. வயிற்றுக்குள்போதுமான வெளிச்சம் இல்லாததே இதற்குக் காரணம்.

### எவ்வாறு இயங்குகிறது?

எர்லாங்கன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹென்னிங், சில ஆண்டுகளுக்கு முன்பு, நோயாளிகளின் வயிற்றுக்குள் எடுக்கப்பட்ட துல்லியமான டெலிவிஷன் படங்களைக்காட்டினார். நூற்றுக்கணக்கான டாக்டர்களும் மருத்துவ மாணவர்களும் இதைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். இப்படங்கள் மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் இருந்தன. இதற்கு முன்னர் இவ்வளவு தெளிவான முறையில் ''வயிற்றுப் படங்கள்'' அமையவில்லை. பேராசிரியர் ஹென்னிங், இதற்கு ஒரு சிறு உத்தியைக் கையாண்டார். பத்து மில்லிமீட்டர் நூலிழைக்கண்ணுடிக்குழாய் ஒன்றை நோயாளியை விழுங்க வைத்தார். இதைவிழுங்குவதில் நோயாளிக்கு எவ்வித சிரமமும்ஏற்படவில்லை. வயிற்றுக்குள் நூலிழைக் கண்ணுடிக் குழாய் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் ஒலியைப் பாய்ச்சுகிறது. ஒவ்வொரு நூலிழைக் கண்ணுடியும் பிரகாசமாக விளங்குகின்றது. ஒவ்வொரு கண்ணுடியின் விட்டம், சாதாரண மனித ரோமத்தைவிட பத்து மடங்கு மெல்லியதாகும். வளையும் தன்மையுடைய கண்ணுடிக் குழாயின் முனைகளில் அமைந்துள்ள இந்த ஒளி இழைகள் ஒளிவீச அங்கிருந்து தெளிவான முறையில் படம்கிடைக்கிறது. அங்கிருந்து படம் அனுப்பப்படுவதில் எவ்விதத்திலும் தரம் குறைந்துவிடாது.

மொத்தத்தில்எட்டுமில்லிமீடர் விட்டமுள்ள சின்னஞ்சிறு ''காமிரா''வும் அதற்கு ஏற்ற கேபிளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நோயாளியின் வயிற்றில் என்ன கோளாறு என்பதை துல்லியமாகக் கண்டுபிடிக்க, இதனால் டாக்டர்களுக்கு வசதிப்படுகிறது. வயிற்றை இன்னும் துளாவி மூலைமுடுக்கிலும் ஆராய்ந்து படமெடுக்கக்கூடிய நுணுக்கமான காமிரா ஒன்றையும் கண்டுபிடிக்கும் காலம் விரைவில் வரலாம்!

### ஊடுருவிக் கருவி

நூலிழைக் கண்ணுடிகள் மேலும் விந்தை புரிந்து வருகின்றன. தோலின் வழியாக உள்ளே கூர்ந்து பார்க்கக்கூடிய அபூர்வ 'மைக்ராஸ்கோப்' ஒன்றும் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது, மருந்து செலுத்தும் ஊசியின் முனையில் மயிரிழைபோல் அமைந்துள்ள கண்ணுடிக்குழாயை சொருகி, தோலில் குத்த வேண்டியதுதான். நூற்றுக்கணக்கான மெல்லிய கண்ணுடிக் குழாய்கள் மொத்தத்தில் கால் மில்லிமீட்டர் அகலத்துக்கு மட்டுமே பெருக்கும். இவற்றைஒரு ''மைக்ராஸ்கோப்'' கருவியில் பொருத்திக் கொள்ளலாம். அதாவது ஒரு நுண்ணிய கண்ணுடிக் குழாயின் விட்டம் மில்லி மீட்டரில் ஐயாயிரம் பாகத்தில் ஒன்ருக இருக்கும். இதன்மூலம் நோயாளியின் ரத்தக் குழாயில் இரத்த அணுக்களை நன்ருகப் பார்க்கலாம். இதன் பயனாக சத்திர சிகிச்சை செய்யாமலேயே, உட்புறமாக கெட்டுப்போன பாகத்தை பரிசோதனை செய்யலாம்.

## விஞ்ஞானச் சுருக்கம்

பத்து ஆண்டுகள்வரை இரத்தத்தைக் கெடாமல் சேமித்து வைக்கக்கூடிய முற்றிலும் நவீன இரத்த சேமிப்பு நிலையம் ஒன்று மேற்குஜெர்மனியில் 'வீசன் திட்' என்னுமிடத்தில் சமீபத்தில் திறக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் நவீனமான இந்த இரத்த சேமிப்புநிலையத்தில் 135 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். இங்குள்ள நிலையத்தில் காற்றே இல்லாத-காற்று உள்ளே புகமுடியாத (Vaccum Drier) கருவியில் இரத்தப் பிளாஸ்மாவைப் பத்து ஆண்டுகளானுலும் சிறிதும் கெட்டுப்போகாதபடி பதனப்படுத்திப் பாதுகாக்கமுடியும். இந்நிலையத்தில் லட்சம் போத்தல் இரத்தத்தைப் பதனப்படுத்திச் சேமித்து வைக்கமுடியும். இந்நிலையத்தைக் கட்டி முடிக்க 90,2,6500 லட்சம் ரூபாய் செலவாகியது.

°°

சாதாரண தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டுதண்ணீர் இறைக்க முடியாத குழாய்க்கிணறுகளிலும், சுரங்கக் கிணறுகளிலுமிருந்து தண்ணீர் இறைப்பதற்கு மின்காந்த முறையால் இயங்கும் மிகச்சிறு தண்ணீர்பம்புகள் செய்யப்பட்டுள்ளன. இவை மணியொன்றுக்கு 2.3 கன மீட்டர் தண்ணீரை இறைக்கும் திறமையுடையன மண்ணுல் மூடப்பட்டுள்ள கிடங்குகள், கிணறுகள் ஆகியவற்றிலிருந்தும் இந்த இயந்திரங்கள் மூலம் தண்ணீர் இறைக்க முடியும். மின்காந்தங்கள் வளியில் அசைவை (Vibration) உண்டாக்கி அதன் மூலம் தண்ணீர்இறைக்கும் இந்த இயந்திரத்தை சோவியத் விஞ்ஞானிகள் உற்பத்திசெய்துள்ளனர்.

## தமிழில் விஞ்ஞானம்

சுயபாஷைகள் மூலம் கல்விபுகட்டப்பட்டு வரும் காலம் இது. தனது தாய் மொழியில் ஒரு மாணவன் கல்வியறிவைப் பெறும் போது அவன் பாடத்தை இலகுவில் விளங்கிக் கொள்ள ஏதுவாகும் என்பதே உளநூலார் கருத்தாகும்.

ஆனல்—

சென்ற டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜீ. ஸி. ஈ. பரீட்சைக்கு தோற்றியவர்களில் பெரும் பாலானேர் பரீட்சையில் தோல்வி கண்டார்கள். விஞ்ஞானப்பாடங்களைசுயபாஷைகளில் பயின்ற மாணவர்கள் முதல்முறையாக பரீட்சைக்குத் தோற்றியதும் இப்பெரும் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் எனக் கூறப்பட்டது.

இதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா? அப்படியானுல் அதற்கான காரணங்கள் என்ன? அவற்றை நிவர்த்திக்க என்ன செய்யவேண்டும்?

போதிய பாட நூல்கள் தமிழில் இல்லாதது காரணமா? அன்றி ஆசிரியர்களுக்கு சுயபாஷையில் பயிற்றுவிக்கும் தேர்ச்சி குறைவா? எது காரணம்?

உங்கள் கருத்தை எழுதுங்கள்.

''நாடும் நாமும்''
மே/பா ஈழநாடு
த. பெ. 48
யாழ்ப்பாணம்.


பஞ்சாமிர்தம்

வி. என். பி.

தயாரித்து
அளிப்பது

நாளை
6 - 6 - 66
ஈழநாடு
இதழில்
வெளிவருகிறது


## ஒரு கணம்....

அன்பார்த்த வாசகர்களே!

நாடு நலம் பெற்ருல்தான் நாம் நலமாக வாழலாம். நாடு நலம் பெற எங்கள் அயராத உழைப்புத்தேவை. எனவேஎமது நல்வாழ்வு நாட்டினவளர்ச்சியிலும் நாட்டின்வளர்ச்சிநமது உழைப்பின் திறமையிலும் தங்கியிருப்பதால்நாமும் நாடும் பிரிக்க முடியாதவர்கள்.

நம் நாடு நலம் பெற வேண்டுமானுல் விவசாய, வர்த்தக கைத்தொழில் துறைகள் வளர வேண்டும் இவை அபிவிருத்தியடைவதற்குகல்வி, விஞ்ஞானத் துறைகளில் எங்களுக்கு போதிய தேர்ச்சி வேண்டும்.

எனவே தான் நாட்டு வளர்ச்சி கருதி விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், கல்வி விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட கட்டுரை, கருத்துரைகளைத் தாங்கி வரும் ''நாடும் நாமும்'' பகுதியை ஆரம்பித்துள்ளோம்.

மேற்கூறிய துறைகளில் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் ஈடுபட்டிருக்கலாம். அவற்றை வளர்க்கக் கூடிய புதிய மருந்துகள் உங்களுக்குத் தோன்றலாம். அவற்றை 'நாடும்நாமும்' பகுதிக்கு அனுப்பி வைத்தால் உங்கள் சகவாசகநேயர்களுக்கும் பயன்படுமல்லவா?

## தொழிற்சாலைப் புகையினுலும் புற்றுநோய் ஏற்படுகிறது

சிக்ரெட் பிடிப்பது. தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் புகைமண்டலம் காற்று மண்டலத்தில் சேர்ந்து சுவாகிக்கப்படுவது, இவைகளால் சுவாசப்பையின் புற்றுநோய் ஏற்படுவது சாத்தியம் என்பது இப்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அணுக்குண்டு வீசப்பட்டதின் காரணமாக லுகேமியா என்ற அபாயகரமாண் இரத்த வியாதி அதிகரித்துள்ளதென்பதையும் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

சிகரெட் பிடிப்பவர்கள், தொழில் பிரதேசங்களில் புகை சூழ்ந்த இடங்களில் வசிப்பவர்கள் ஆகியோருக்குப் புற்று நோய் ஏற்படுகிறதா என்ற விஷயம் குறித்து அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. புற்றுநோய் சிகிச்சை நிபுணர் பேராசிரியர் டோன்டென்கில் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து வாயு மண்டலத்தில் நைட்ராலிக் வாயுக்கள் கலந்து அதை உள்ளே சுவாசிப்பது காரணமாகபுற்றுநோய் ஏற்படுகிறது என்பது தெரியவந்துள்ளது

பிராணிகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்ததில் அவைகளுக்கு ஏற்படும் புற்றுநோய்க்கட்டிகள் மனிதர்களுக்கு ஏற்படும் புற்றுநோய்க்கட்டிகளைப் போலவே இருப்பதாக ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த புற்றுநோய் வருவதற்கு முக்கியகாரணம் 'நைட்ரோஸெமினஸ்' என்ற பொருள் புகையில் கலந்து காற்று மண்டலத்தில் இருப்பதுதான் தொழில் கூடங்களிலிருந்து வெளிப்படும் புகையில் 'நைட்ரோஸெமினஸ்' இருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவர் கண்டுபிடிப்பு குறித்து இன்னும் தொழில் பிரதேசங்களில் ஆராயப்பட்டு வருகிறது.

புற்றுநோய் ஏற்படுவதால் மனித இரத்தம் பாதிக்கப்படுகிறது. இரத்த உற்பத்தி செய்யும் பாகங்களை இந்த நோய் மிகவும் பாதிக்கச் செய்துவிடும். லுகேமியா, ரெடிகுலோஸல ஆகிய இரத்த வியாதிகள் மிக ஆபத்தானவை. ஆராய்ச்சிகள் நடைபெற்றதன் பயனாக இத்தகைய வியாதிகள் ஏற்படுவதையும் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிந்து சிகிச்சை செய்யும் முறைகள் பற்றியும் இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன. இயோனைஸ்ட் கிரணங்கள் மூலம் லுகேமியா ஏற்படுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இரத்தத்தில் வெள்ளை 'ஸெல்கள்' அதிகம் காணப்படுவது லுகேமியா வியாதி இருப்பதை உணர்த்துவதாகும்.

பேராசிரியர் ஜியார்ஜி, ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகஸாகி ஆகிய நகரங்களில் அணுக்குண்டு வீசப்பட்டதன் விளைவாக அங்குள்ள மக்களுக்கு லுகேமியா வியாதி ஏற்பட்டுள்ளதென்று கூறுகிருர். ''அயோனைஸ்ட்'' கிரணங்கள் காரணமாகவே இவ்வியாதி ஏற்பட்டதென்பதையும் அவர் கண்டுபிடித்திருக்கிருர்.

ஜப்பானில்சாதாரணமாக 10 லட்சம் பேர் 26 பேருக்கு லுகேமியா வியாதி உள்ளது. அணுகுண்டு வெடித்ததன்பின்1000 கஜதூர சுற்றளவுள்ள வட்டத்தில் பத்து லட்சம் பேர் 1460 பேருக்கு லுகேமியா நோய் ஏற்பட்டது, கண்டு பிடிக்கப்பட்டது 10000 கஜ சுற்றுவட்டத்தில் பத்து லட்சம் பேரில் 29 பேர் இந்த வியாதியால் பிடிக்கப் பட்டுள்ளனர் 'எக்ஸ்ரே'க்களில் லுகேமியா ஏற்படும் என்பது 1920லேயே கண்டு பிடிக்கப்பட்டது. வைரஸ் மூலமும் லுகேமியா ஏற்படும் என்பதையும் பேராசிரியர் ஜியார்ஜி கண்டுபிடித்திருக்கிருர். ஆனுல் தொற்று வியாதி அல்ல அது என்பது அவருடைய கருத்து. எக்ஸ்ரேக்களிலிருந்து பாதுகாப்புகள் ஏற்பட்டதன் காரணமாகவே 10000 பேர்களில் இரண்டு பேருக்கு இந்த வியாதி ஏற்பட்டிருக்கிறது. லுகேமியா வியாதியால் பீடிக்கப்பட்ட ஒரு ஸ்திரிக்கு பிறக்கும் குழந்தைக்கு இந்தநோயே இருப்பதில்லை. ஆகவே இது தொற்று வியாதியல்ல.

## வீடுகளில் கைத்தொழில்

கைத்தொழில் துறையை வளர்ப்பதற்கு பெருந்துறைக் கைத்தொழில்களால்தான் முடியும் என்பதில்லை, பெருந்துறைக் கைத்தொழில்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ அது போலவே சிறுகைத்தொழில்களும் அவசியம்.

நமக்கு வேண்டிய பொருட்களை நாமே தயாரித்தோம் என்ருல் பிறநாட்டாரை நம்பியிருந்து வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை.

நமது நாட்டில் தற்போது கைத்தொழில் துறையில் ஒரு புதிய உற்சாகத்தையும், திருப்பத்தையும் காணமுடிகிறது.

பெருந்துறைக் கைத்தொழில்களில் தங்கள் பணத்தை முதலீடு செய்யத்தயங்கி வந்தவர்கள்கூட இப்பொழுது இத்துறையின் வளர்ச்சி கண்டு தங்கள் நாட்டத்தைச் செலுத்திவருகின்றனர்.

கைத்தொழில் வளர தொழில் நுட்ப அறிவும், திறமையும் அவசியம் இவை பற்றி இங்கு விவரிக்கின் மிக நீளும்.

சிறுகைத் தொழில்கள் அதுவும் வீட்டில் செய்யும் கைத்தொழில்களைப் பொருத்தமட்டில் ஓரளவு செயற திறனிருப்பின் இவற்றை நல்ல முறையில் சய்யலாம். நமது நாட்டில் நமது ஊரில்கிடைக்கக்கூடியமூலப் பொருட்களைக் கொண்டு ஓய்வு நேரங்களில் சிறுசிறு கைத்தொழில்களைச் செய்வதால் எமக்குத் தேவையான பொருட்களை உற்பத்திசெய்வதுடன் நாட்டு பொருளாதார விருத்திக்கும் உதவியவர்களாவோம்.

கயிறு திரித்தல், பொம்மைசெய்தல், வெங்காயக் கூடை பின்னல், புற்பாய்கள், கம்பிளுல் கூடை முதலியன பின்னல், ஜாம் போன்ற பழரசங்களைத் தயாரித்தல் ஆகிய சிறு குடிசைக் கைத்தொழில்களை எமது ஊரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டே வீடுகளில் செய்யமுடியுமல்லவா? சிறு மட்டத்தில் ஆரம்பிக்கும் இக்கைத்தொழில்கள் வளரவளர யந்தியமயமாக்கக்கூடியவற்றை அவ்விதம் செய்யலாம்.

-'கைத்தொழில் நேசன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் ஹாக்கிகோஷ்டி 17-ல் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாத நடுப்பகுதியில் இலங்கை வரவிருக்கும் பாகிஸ்தான் ஹாக்கி கோஷ்டி யாழ்ப்பாணத்துக்கும் விஜயம்செய்து ஒரு போட்டியில் கலந்துகொள்ளவிருக்கிறது.

17-ந்திகதி யாழ்ப்பாணம் தெரிவு ஹாக்கி கோஷ்டியுடன் பாகிஸ்தான் ஹாக்கி கோஷ்டி மோதிக்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.'

சர்வதேசப் புகழ் வாய்ந்த ஹாக்கிவீரர்களைக்கொண்ட பாகிஸ்தான் கோஷ்டியில் ஐந்து ஒலிம்பிக் வீரர்கள் இருப்பார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில சிறந்த ஹாக்கி வீரர்கள் யாழ். கோஷ்டியில் இருப்பார்கள்.

இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் இம்மாதம் 16-ந்திகதி நடைபெறும். இவ் விளையாட்டுப் போட்டிகட்கு அதிபர் திரு. வே. சோமசுந்தரம் தலைமை வகிப்பார்.

2-ம் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## இவ்வார இறுதியில் 'சாம்பியன்' போட்டி நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 2-ம் பிரிவுகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிச் சாம்பியன்போட்டி இம்மாதம் 8-ம் 9-ம்திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டியில் 'ஏ' பிரிவில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ் மத்திய கல்லூரியுடன் 'பி' பிரிவில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ் இந்துகல்லூரி மோதவிருக்கிறது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் யாழ் மத்திய கல்லூரி மகாஜனக்கல்லூரி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ் இந்துக்கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மானிப்பாய்இந்துக் கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரிஆகியவற்றை தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

இச்சாம்பியன் போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## இந்தோ-பாகிஸ்தான் அடுத்த பேச்சு

புதுடில்லி, ஜூன் 6

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே மற்ருேர் சுற்றுபேச்சு நடத்துவதற்கான அடிப்படை, மட்டம் ஆகிய அம்சங்கள்பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகின்றன.

சென்றமுறைராவல்பிண்டியில் நடைபெற்ற பேச்சுக்களில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, அடுத்த சந்திப்பு டில்லியில் நடைபெறுமென்றும், விரைவில் இதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

நிலைமையின் அபிவிருத்தி பற்றி ரஷ்யாவுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானுடன் எந்த மட்டத்திலும் பேச்சு நடத்த தயாரென ஸ்ரீமதி இந்திராகாந்தி சென்ற மாதம் கூறியிருந்தார். இதற்கு அயூப்கானிடமிருந்து ஆக்க பூர்வமான பதில் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்டையில் இந்தோ பாகிஸ்தான் காஷ்மீர்எல்லையில் ஐ நா ராணுவ மேற்பார்வையாளராக சிலிநாட்டைச் சேர்ந்த ஜெனரல் கொன்ஸோலாலைஸ யுதாண்ட் நியமித்திருக்கிருர்.

## ராஜாங்க ம திரி கருத்து

கொழும்பு, சனி

உள்ளூர் திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்க அரசாங்கம் தலையிடுவது அவசியம்' என ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன உள்ளூர் திரைப்படத்தயாரிப்பில்ஈடுபட்டுள்ளவர்களின் மகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரைப்படத் தயாரிப்புத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள பிரிட்டன் போன்ற நாடுகளில் அரசாங்கம் தலையீடு செய்து வருகிறதென்றும் வெளிநாடுகளின்போட்டியைத் தவிர்ப்பதற்கும் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இது தேவை என்றும் மந்திரி சுட்டிக் காட்டினர்.

## மாத இறுதியில் நாகர் பேச்சு

புதுடில்லி, ஜூன் 4

இந்தியப்பிரதம மந்திரிக்கும் பகை நாகர்களுக்குமிடையே இம்மாதக் கடைசி வாரத்தில் டில்லியில் பேச்சு நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

பஸ் நிலையமொன்றில் வெடிகுண்டுடன் காணப்பட்ட நாகா இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.




## கொழும்பு ஞாயிறு 5-6-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப நிகழ்ச்சி.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 பாட்டு—நாகலக்ஷ்மி சத்தியவாகீஸ்வரம், 6-15 புரட்டஷ்ரன்ட் நிகழ்ச்சி, 7-15 நேயர் கடிதங்கள், 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 நேயர்விருப்பம், 9-15 பாட்டு—பி. கந்தசாமிப்பிள்ளை. 10-00 மாதர் கேட்டவை.

## பலாத்கார வழக்கு: எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய்தெற்கு அத்தாய் என்ற இடத்தைச்சேர்த ஆறுமுகம் துரைரசா என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் தெய்வானைப்பிள்ளை என்ற யுவதி மீது பலாத்காரம் பிரயோகிக்க முயன்றதாக பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ருபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கி. அன்னம்மா, கான்ஸ்டபிள் திரு. ஏ. எம். பெரேரா கிராமசேவகர் திரு. வ ஜெயவீரசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தபின், நீதிபதி எதிரியை சுற்றவாளியாகக் கண்டு வழக்கைத்தள்ளுபடி செய்தார்.

வழக்காளி தரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி இராஜேஸ்வரனும் வழக்கறிஞர் திரு. என். நடராசா உதவியுடன் அட்வக்கேட் திரு. எஸ். ஜெயசிங்கம் ஆஜராஞர். எதிர்தரப்பில் வழக்கறிஞர் திரு. ம. வேலு...யிலும் உதவியுடன் திரு. நவரத்தினம் ஆஜராஞர்.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, ஜூன் 4

உத்தேச இந்தோ-அமெரிக்க கல்வி ஸ்தாபனத் திட்டத்தைஎதிர்த்து 300 மாண... செய்தார்கள்.

## சகல பாடசாலைகளிலும் தமிழ்ப்பிரிவு அமைக்கக் கோரிக்கை

### அரசாங்க பாராளுமன்றக் குழு கூட்டத்தில் பிரேரணை வரும்

கொழும்பு, சனி

தமிழ் மாணவர்கள் குறைவாக இருப்பினும் அப்பாடசாலைகளிலும் தமிழ்ப்பிரிவு இருக்கவேண்டும் என்றும் இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதுடன் தமிழ் ஆசிரியர்களை எல்லப் பாடசாலைகளிலும் நியமிக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானத்தை அரசாங்க பாராளுமன்றக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பில் கிளிநொச்சி எம். பி. திரு. கே. பி. இரத்தினம் கொண்டுவர விருக்கிருர்.

முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட இத்தீர்மானத்தை கல்வி மந்திரி எதிர்ப்பாரென்றும் இலங்கையின் எல்லாப்பாகங்களிலும் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இன்னிங்ஸ் தோல்வியை இங்கிலாந்து சமாளிக்குமா?

— "அவதானி" —

மான்செஸ்டர், மே 4

இங்கிலாந்து கோஷ்டிக்கும் மேற்கிந்தியதீவு கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட்டெஸ் போட்டியில் ஏற்படும் 'விளைவுகளை' இங்கிலாந்து எவ்விதமாகச் சமாளிக்க முடியும் என்பதுதான் இப்பொழுது இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியை மைக் ஸ்மித்தை எதிர்நோக்கியிருக்கும் முக்கியப் பிரச்னையாகும்.

முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் முதலில் விளையாடத்தொடங்கிய மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி நேற்று (இரண்டாவது நாளில்) வெள்ளிக்கிழமை சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 484 ஓட்டங்கள் எடுத்தது. இதன் பின்னர் விளையாட ஆரம்பித்த இங்கிலாந்துகோஷ்டி ஆட்ட நேர இறுதிவரை எட்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 163 ஓட்டங்கள் எடுத்தது. இன்று சனிக்கிழமை போட்டி தொடர்ந்து நடைபெறுகிறது.

### எதிர்பாராதது

நேற்றைய ஆட்டத்தில் மேற்கிந்திய பந்தெறிவீரர் லான்ஸ் கிப்ஸ் 35 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும் வீழ்த்தியிருக்கிருர். கிறிபித் ஒரு விக்கட்டையும் ஹொல்போர்ட் இரண்டு விக்கட்டுகளையும் வீழ்த்தியிருக்கின்றர். சிறிதும் எதிர்பார்த்ததற்கு மாருக கே. எவ். பரிங்டன் 05 ஓட்டங்களுடனும் வி. கவுட்ரி 12 ஓட்டங்களுடனும் ஸ்மித் 05 ஓட்டங்களுடனும் ஜே. எவ். பார்க்ஸ் 43 (கூடுதல்) ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்துள்ளனர். டி. பிறவுணும் கே ஹிக்ஸம் (1, 9 ஓட்டங்களுடன்) இன்று தொடர்ந்து விளையாடுவார்கள்

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் இதுவரை மிகவும் குறைவான ஓட்டங்கள் எடுத்திருப்பது நான் முன்னர் குறிப்பிட்டிருந்தது போல மேற்கிந்திய கோஷ்டிக்கு நிலைமையைச சாதகமாக்கியிருக்கிறது. இன்று நிலைமை எப்படியோ?

எவ்வளவு விரைவாகவும் கூடுதலாகவும் ஓட்டங்கள் எடுக்கவேண்டுமோ அதற்கு எதிர்மருக இங்கிலாந்து 'சோம்பேறித்'' தனமாக விளையாடியிருக்கிறது. மேற்கிந்திய கோஷ்டயினர் துடுப்பெடுத்தாடுவதில் மட்டுமின்றி ''பீல்டிங்'' கிலும் சிறப்பாக விளையாடியிருப்பது நேற்று அவர்கள் 6 பந்துகளைப் பிடித்ததிலிருந்து நிருபணமாகவிருக்கிறது.

இன்று சனிக்கிழமை முதலாவதுகிரிக்கெட் டெஸ்டின் மூன்ருவது நாளாகும். இன்னும் இரண்டு தினங்களே இருக்கிறது. இந்தடெஸ்டில் மேற்கிந்தியா வெற்றியீட்டுவது இப்பொழுது உறுதியாகிவிட்டபோதிலும் இன்னிங்ஸ் தோல்வியை இங்கிலாந்து சமாளிக்குமா என்பதுதான் புதிராகவிருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மாத அவகாசம் தேவையாம்!

## மந்திரியை பேட்டிகாண யாழ்ப்பாண வர்த்தகர் முடிவு

யாழ்ப்பாணம், சனி

**தற்பொழுது இருப்பில் இருக்கும் விலையுயர்ந்த துணிகளை விற்பனை செய்வதற்காக ஆறுமாத அவகாசம் தரும்படி வர்த்தக மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம், யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற வட இலங்கை ஜவுளி வர்த்தக சங்க கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

ஸ்ரீ பாரதி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ஆர். ஜே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், சுமார் 150 ஜவுளி கடை சொந்தக்காரர்கள் கலந்து கொண்டனர்.

ஆறுமாதத்தின் பின் கூப்பன் புள்ளிகளுக்கு துணிகளை விற்பனை செய்ய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

திரு. சோமசுந்தரம் தலைமையில் இன்று செல்லும் தூது கோஷ்டி, வர்த்தக மந்திரியை சந்தித்து, தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையைத் தெளிவாக விளக்கி, ஆறுமாத அவகாசம் தரும்படி கேட்கும்.

இத்தூது கோஷ்டி பேச்சுவார்த்தையை முடித்து கொழும்பிலிருந்து திரும்பும் வரை யாழ்ப்பாணத்தில் உள்ள ஜவுளி கடைகளில் விற்பனை செய்வதில்லையென்றும், அதுவரை இருப்பு எடுப்பும், புதிய விலைக் குறிப்பும் நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நேற்றைய தினம் சில கடைகளில் ஒற்றைக் கதவு திறந்து வியாபாரம் செய்ததை கூட்டத்திலுள்ள சிலர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது, இனிமேல் ஒற்றைக் கதவை திறந்து எவரும் வியாபாரம் செய்யக் கூடாதென தெரிவிக்கப்பட்டது.

(ந நி)

## 88 வர்த்தகரின் லைசென்ஸ் ரத்து

பம்பலப்பிட்டி, சனி

கடந்த எட்டு மாதங்களில் 88 வர்த்தகர்களின் வர்த்தக லைசென்சுகள் ரத்துச்செய்யப்பட்டன. இவர்களில் 41 பேர் ஜவுளி வர்த்தகர்கள்; இவர்கள் இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு முரணாக நடந்து கொண்டார்கள் என சுங்கப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டவர்கள். மிகுதி 47 பேரும் இறக்குமதிக் கட்டுப்பாட்ட திகாரிக்கு பொய்யான விபரங்கள் காட்டியவர்கள்.

---

## வள்ளுவர், ஞானசம்பந்தர் குருபூசை

கோண்டாவில், சனி

கோண்டாவில்மேற்குவேத பாராயண ச. ச. நிலையத்தில் திருவள்ளுவர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஆகியோர் குருபூசை நடத்தப்பட்டது. சைவப் பெரியாரின் சொற்பொழிவும், இன்னிசைக்கச்சேரிகளும் இடம் பெற்றன.

## டட்லிக்கு எதிரான தேர்தல்மனு தள்ளுபடி

### பிரதம நீதியரசர் தீர்ப்பு

கொழும்பு, வெள்ளி

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா டெடிகம தொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட மனு இன்று செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தேர்தல் ஆட்சேப மனு பிரதம நீதியரசர் திரு. எம். ஸி. சன்சோனிமுன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு இன்று காலை தீர்ப்பு வழங்கப்பட்டது.

1665-ம் ஆண்டு மார்ச் 22-ந் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் டெடிகமத் தொகுதியில் தம்முடன் போட்டியிட்ட திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயகாவை திரு டட்லி சேனநாயகா தோற்கடித்து வெற்றிபெற்ருர்.

பிரதமர் டட்லி சேனநாக்காவுக்கு எதிராக இந்த ஆட்சேப மனுவை நியந்துறு போலவைச் சேர்ந்த எஸ். ரூமியல் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரரின் மூன்று குற்றச்சாட்டுக்களும் தோல்வி கண்டுள்ளதென்று நீதியரசர் சன்சோனி தெரிவித்தார்.

தனிப்பட்ட செல்வாக்கும், பொதுவான பயமுத்தலும், ரத்னே தேசப்பரியாவின் தனிப்பட்ட வாழ்க்கையை தவருன முறையில் பிரசுரஞ் செய்ததாகவும் மனுதாரர் செய்திருந்த குற்றச் சாட்டுகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக நீதியரசர் கூறினுர்.

ஐம்பது பக்கங்களில் அச்சடிக்கப்பட்ட தமது தீர்ப்பை நீதியரசர் இன்று காலை வாசித்து முடிக்க ஒரு மணித்தியாலம் நாற்பது நமிடங்கள் பிடித்தன.

டட்லி சேனநாயகாவின் சாட்சியத்தில், ரத்னேதேசபிரிய கூ[illegible]மொ[illegible] விற்பனவு ஸ்தாபனத்தில் பெரியதொரு கறுப்புச் சந்தைக் காரராக இருந்திருக்கிருரென்று சொல்லவில்லையென்று கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறதென நீதியரசர் தம் தீர்ப்பின்போது சொன்ஞர்

டட்லிசேனநாயகா1939ம் ஆண்டிலிருந்து1956ம் ஆண்டைத் தவிர டெடிகமத் தொகுதி அங்கத்தவராக இருந்து வருகிருரென்றும், மூன்றுமுறைக்குமேலாக பிரதமராக இருந்திருக்கிருரென்றும் கூறிய நீதியரசர், ஒரு அபேட்சகரைப்பற்றி தவருன கருத்துக்களைக்கூறுவது பாரதூரமான குற்றமெனஅவர் அறிந்திருக்கக்கூடிய நிலையிலிருந்தபதால் அவர் தவருன முறையில் கூறியிருக்கமாட்டாரென்றும் நீதியரசர் மேலும் தமது தீர்ப்பில் கூறினுர்

## ஜவுளிக் கூப்பன்களில் வர்த்தகர் மோசடி?

### கொழும்புத் தெருக்களில் பொலிசார் ரோந்து

கொழும்பு, வெள்ளி

விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் ஸ்திரமான அமுலுக்கு வருவதற்கு முன்னதாக ஜவுளிகூப்பன்களை விலைக்கு வாங்குவதில் வர்த்தகப் பிரதிநிதிகள் இன்றுகோட்டைப் பகுதியிலும் புறக்கோட்டையிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இந்தக் கூப்பன்களை சில வர்த்தகர்கள் 25ரூபாய் வரை பணம் கொடுத்து வாங்கினுர்கள்.

இன்று திறக்கப்பட்டிருந்த சில கடைகளில், குறைந்த வருமானம் பெறும்குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் சிறுமிகளும் ஏராளமாகக் காணப்பட்டார்கள், இவர்கள் விலையுயர்ந்த டெரிலின், நைலோன், ட்விட்ஸ் போன்ற துணிகளைக் கூப்பனுக்கு வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

மெமொன் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் கடைகள் திறக்கப்பட்டிருந்தன ஆனல் சிந்தி வர்த்தகர்கள் 5-ந் திகதிதான் திறப்போம் என்று அறிவித்திருக்கிருர்கள்,

விலையுயர்ந்த துணிகளை அநேகர் அங்காடி வியாபாரிகளுக்காகவும்வெளியூர்வர்த்தகர்களுக்காகவுமே வாங்குகிருர்கள்

கூப்பன்களை விலைக்கு வாங்குவதன் மூலம் அவைகளை விலையுயர்ந்த ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டு விட்டதாகக் கணக்குக் காட்டுவதற்கு வர்த்தகர்கள் பயன்படுத்துவார்கள் என்றுதெரிகிறது

### அமைச்சின் நடவடிக்கை

கூப்பன்கள் ஏராளமாக வர்த்தகர்ககளால் வாங்கப்படுவதுகுறித்து வர்த்தக அமைச்சின் ஒரு அதிகாரியிடம் கேட்டபோது, கோட்டையிலும், புறக்கோட்டையிலும் [illegible]தைக்கட்டுப்படுத்துவதற்கு சாதாரண உடை தரித்த பொலிசார் ரோந்து புரிவார்களென்று 'ஈழநாடு' நிருபரிடம் கூறினுர் ஆனல் கூப்பன்களை இப்படி விலைக்கு வாங்குவதன்மூலம்அவர்கள் எம்மாதிரியான குற்றத்தை புரிகிருர்களென்று அந்தஅதிகாரியால் கூறமுடியவில்லை

இன்று இரண்டாவது தினமாகவும் ஆயுதம் தரித்த பொலிசார் வீதிகளில் ரோந்து புரிந்தார்கள் கொள்ளையடிப்புநடைபெறக்கூடுமென்று கிலி ஏற்பட்டிருந்தாலும் இதுவரை எதுவித அசம்பாவிதமும் நிகழவில்லை அரசாங்கம் அங்கீகரித்துள்ள சட்டங்களைதமது இலாகா அமுலாக்குவதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்கும்என்று வர்த்தக அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினுர்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக வர்த்தகர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள்யாவும் விரிவாகப் பரிசிலனை செய்யப்படும் ரசீதுப்புத்தகங்களும் கவனமாகப் பரிசிலிக்கப்படவிருக்கின்றன.

---

### விற்பனைக்கு

காணி

பெரியவிளான் தெல்லிப்பளை ரூேட்டில் பெரிய விளானிலிருந்து 1/2 மைல் தூரத்தில் ரூேட்டின் வலதுகரையிலுள்ள வீடு கட்டக்கூடிய கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பொ. யோ. வேதநாயகம், ஒப்பால் கலத்தோட்டம், கம்மடுவ என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 507

## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

ஜவுளி வர்த்தகர்களுக்கு வர்த்தக அமைச்சு இன்று மாலை இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்தது.

ஜூன் 5-ம் திகதி ஜவுளி வர்த்தகர்கள் கடைகளை மாமுப்படி திறந்து வர்த்தகம் செய்யவேண்டும் இன்றேல். அவர்களின் ஜவுளி கையிருப்புகள் யாவும் அரசாங்கத்தால் கைப்பற்றப்படும்.

ஜவுளிக்கட்டுப்பாட்டுவிலை சட்டம் அமுலுக்குவந்ததை தொடர்ந்து ஜவுளி வர்த்தகர்கள், கடைகளை மூடுவதிலும், ஒருபலகையைத் திறந்து விற்பனை செய்வதிலும் ஈடுபட்டதாலும் துணிகளை வேறு முறைகளில் விற்பனை செய்யவும், சட்டத்தை மீறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது

கணக்கெடுப்புக்கும், விலை குறிக்கவும் போதிய அளவு அவகாசம் கொடுத்திருந்தும் அதை மீறி 5-ந்திகதிக்குள் கடைகளை வர்த்தகர்கள் அடைத்து வைத்தால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த இறுதிஎச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கூப்பன் மூலம் துணிகள் விற்பனவு செய்வதற்குஅனுமதி பெற்ற தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களில் கூப்பனில்லாமல் பருத்தித் துணிமட்டும் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது இந்தச்சலுகை தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களில் மட்டும் இருக்கும் மொத்த வி[illegible] ஸ்தாபனங்களில் இந்தச் சலுகை கிடைக்க மாட்டாது.

### சமயக்கல்வி அவசியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'கல்லூரியில் மாணவர் தமது சமயத்தையும் கசடறக்கற்றுக்கொள்ளவேண்டும். சமய அடிப்படையில் கல்வி கற்கும் மாணவரின் முன்னேற்றத்துக்கு கல்லூரி அதிபர்கள் ஊக்கமளித்து உதவவேண்டும்.

இவ்வாறு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பெற்ருேர்-ஆசிரியர் சங்ககூட்டத்துக்குத்தலைமை தாங்கிப்பேசிய கல்லூரி அதிபர் திரு. சி. இராசதுரை கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் மாணவர்கள் தமது சமயத்தில் அதிக அக்கறை கொள்ளுமாறு தாம் ஏற்ற ஒழுங்குகளைச்செய்யப்போவதாகவும் இதற்கு ஆசிரியர்கள் பெற்ருேர்கள் ஆகியோரது ஒத்துழைப்பு வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பெற்ருேர்-ஆசிரியர் சங்ககெளரவகாரியதரிசி திரு. சி. சிவத்திலிங்கம் நன்றி கூறினுர்.

### சட்ட தினம்

சுழிபுரம். சனி

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சட்டதினம் கொண்டாடப்பட்டது. புலவர் கா. வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற இக் கொண்டாட்டத்தில் பலர் பேசினர் பண்டிதர் திரு. எஸ். நவரந்தினம் நன்றியுரை கூறினுர்.

---

### மனேஜர் தேவை

கோண்டாவில் ப. நோ. கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. தகமை: G. C. E. 6 பாடங்களில் சித்தியடைந்தவரும் கூட்டுறவுப்பயிற்சியும் விரும்பத்தக்கது. வயது 35க்குட்பட்டவர்கள்சமீபத்திற்பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 15-6-66-க்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கலாம். பிணை: ரொக்கம் ரூபா1000/- ஆதனம் ரூபா 2000/- சம்பளம் மாசம் ரூபா100/-ஆரம்பம். முகவரி:—

சீ. பொன்னம்பலம்,
கௌரவகாரியதரிசி,
கோண்டாவில் ப.நோ.கூ. சங்கம்
கோண்டாவில்.

467

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org